# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.

**1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.**

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

Telephone : **No. 360**

**"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"**

| 86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு மாசிமாதம் 16-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 12 | 7-ம் இலக்கம் |
|---|---|---|


# சிறுபான்மை மதங்களின் சுதந்திரம் பாதிக்கப்படுகின்றது

**அண்மையில் அரசாங்கம் பாராளமன்றத்தில் நிறைவேற்றிய கல்விமசோதாக்களினுல் பெற்ரோரின் கல்வி அடிப்படைஉரிமை பாதிக்கப்பட்டது. இப்போது பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள "வழிபாட்டு ஆலயங்கள், பொருள்கள்" பற்றிய மசோதாவினுல் சிறுபான்மை மதங்களின் சுதந்திரம் அதிகமாகத் தாக்கப்படுகின்றது.**


நகல்மசோதாவின் விதிகளின் பிரகாரம் புதியகோவில், பள்ளிவாசல் முதலிய மதஆலயங்களைக் கட்டுவதற்கு இரண்டு நிபந்தனைகள் அகத்தியமாக நிறைவேற வேண்டும்: (அ) அரைமைல் வட்டாரத்துக்குள் வசிக்கும் ஒரு மதத்தைச் சேர்ந்த 250பேரென்கிலும் அம்மதத்திற்குரிய ஆலயத்தைக் கட்டியெழுப்புவதற்கு உத்தரவுகோரி விண்ணப்பிக்க வேண்டும்.

(ஆ) புதியஆலயம் கட்டப்போகும் இடத்தில் இருந்து ஒரு மைல் வட்டாரத்துக்குள் வேறு எவ்வித மதஆலயமும் இல்லாதிருக்க வேண்டும்.

இந்த இருநிபந்தனைகளும் பெரும்பான்மை மதச்சமூகமாகிய புத்தர்கள் மட்டில் மாத்திரமே இலகுவாய் நிறைவேறக் கூடும். ஏனைய மதத்தினர்—இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள்மட்டில் அது நிறைவேறுவது அரிதிலும் அரிதாகத்தான் இருக்கும். ஏனெனில், நாட்டுப்புறங்களில் சிறுபான்மை மதத்தினர் ஒரு குறிக்கப்பட்ட அரைமைல் வட்டாரத்துக்குள் அவ்வளவு தொகையாகக் குடியேறியிருத்தல் மிகவும் அரிதே. ஐந்து அல்லது பத்துமைல் வட்டாரத்துக்குள் வாழும் ஒரு மதத்தினரின் தொகை 1000-க்கு அல்லது 500-க்கு மேற்பட்டதாயிருந்தாலும், புதிய மசோதாவின் முதலாவது நிபந்தனையின்படி அவர்கள் தங்கள் மததேவையைப் பூர்த்திசெய்ய ஒரு புதிய ஆலயத்தை நிறுவ உரிமையற்றவர்களாகிருர்கள். இவர்கள் தங்கள் மதசுதந்திரத்தை அனுபவிப்பதற்குத் தங்கள் மதத்தைச் சேர்ந்தவர்களில் 250பேர் ஒரு குறிக்கப்பட்ட இடத்தில் குடியேறும்வரை காத்திருக்க வேண்டும். இது நீதியாகுமா?

இரண்டாவது நிபந்தனையையும் அவதானித்துப் பார்த்தால் சிறுபான்மை மதத்தினரின் உரிமை எவ்வளவு தூரம்பாதிக்கப்படுகின்றதென்பது நன்கு புலப்படும். ஏதோ ஒரு மதத்துக்குரிய ஆலயம் இல்லாத பட்டணமோ கிராமமோ இலங்கையில் இல்லை

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]



# தாயகம் திரும்பும் திருச்சிலுவைக் கன்னியர்

மென்சிங்கன் திருச்சிலுவைக் கன்னியர்சபையைச்சேர்ந்த சங். சிஸ்ரர் பெனடிக்ரா (செல்வி கெலன் வஸ்தியாம்பிள்ளை) இம்மதி 18-ந் திகதி யாழ்ப்பாணம்வந்து சேருவார். இவர் கொலம்பகம் அர்ச். சூசையப்பர் ஆசிரியபயிற்சிக்கலாசாலையில் ஆசிரியையாகப் பயிற்சி பெற்று, எமது பாடசாலைகளில் பலஆண்டுகளாகத் தொண்டாற்றியவர். 1958-ம்ஆண்டு இவர் மென்சிங்கன் திருச்சிலுவைக் கன்னியர்சபையிற் சேர்ந்த போது, துறவறப்பயிற்சி பெறும் பொருட்டு மென்சிங்கனிலுள்ள (சுவிற்சலாந்து) தாய்மடத்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு துறவறப் பயிற்சிமுடித்து முதல் முறைவாக்குத்தத்தம் கொடுத்த போது எடுக்கப்பட்ட படத்தை மேலேகாண்க. துறவறப்பயிற்சி முடிந்தபின் சங். சிஸ். பெனடிக்ரா இங்கிலாந்து தேசத்துக்கும் சென்று, அங்கு பாடசாலைகள் நடாத்தப்படும் முறையை அவதானித்துள்ளார். இவர் நம்மத்தியில் நீண்டகாலம் நற்தொண்டாற்ற இறைவன் அருள்பாலிப்பாராக.

# பிரபஞ்சத்துக்கு ஆரம்பமுண்டு, முடிவுமுண்டு.

## பிரித்தானிய பௌதிக ஆராய்ச்சியாளரின் முடிபு

பிரித்தானிய பௌதீக ஆராய்ச்சியாளர்கள் அகிலம் நிச்சயமாகவே ஆரம்பமானது என்பதை நிரூபிப்பதற்குப் புதுஏதுக்கள் கண்டுபிடித்திருக்கிருர்கள். இந்த ஆறுஆராய்ச்சியாளரின் தலைவர் பேராசிரியர் மாட்டின் றையில் ஆவர். ஒரு பெண்உட்பட ஆறு பௌதீக ஆராய்ச்சியாளரைக் கொண்ட இக்கோஷ்டி கேம்பிரிஜ்ஜிலுள்ள முள்ளாட்ரேடியோ அவதான நிலையத்தில் பரிசோதனைகள் செய்து மேல்வரும் நாலுமுடிபுகளைக் கூறுகிருர்கள்:

(1) அகிலம் விரிவடைகின்றது.

(2) அகிலத்தின் ஒரு சிறு பகுதியாகிய பூகோளம் உட்படச் சகல பொருட்களும் அளக்கமுடியாத விரைவில் ஆகாயவெளிக்குப்பறந்து செல்லுகின்றன. ஆகவே, நடுவில் வெறுமை (வெளி) ஏற்படுகிறது.

(3) திட்டமான ஒரு ஆரம்பம் அகிலத்துக்கு உண்டு. (இதைக் குறித்து சிலபத்திரிகைகள், "ஆதியில்கடவுள் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினுர்" என்ற வேதவாக்கியத் தலைப்புக் கொடுத்து இச்செய்தியைப் பிரசுரித்தன.)

(4) அகிலம் என்றும் நிலையாயிராது. இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படும் "நிலைமைக் கொள்கை" பிழைஎன்றுகூறி, அகிலம் விரிந்து வருகின்றது என்று மேற்படி ஆறு ஆராய்ச்சியாளரும் கூறுகின்றனர். நிலைமைக்கொள்கையின்படி சலவாயு அணுக்கள் சேர்ந்து ஆகாயவெளியில் புதிய நட்சத்திரங்களை அடிக்கடி ஆக்குகின்றனவாம். இந்த ஆறுஆராய்ச்சியாளரும் ஒளி ஊடுருவக்கூடிய தூரத்திற்கு அப்பால் உள்ள பொருட்களைப் பார்க்க உதவும் இராட்சதறேடியோ தூரதிருஷ்டியால் அகிலத்தின் எல்லைப்பிராந்தியங்களை ஆராய்ச்சிசெய்ததின் பயனுக இம்முடிவுகளைப் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# மருந்துக்குப்பி

"என்ன **கேட்டி** எங்கோ புறப்படுகிறாய் போலிருக்கிறதே? சே சே... இன்றைக்குப் போகிறதில்லை".

இரண்டாம் வசனம் காதில் விழுந்ததும் அவளுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. அடக்கிக்கொண்டு, பாசாங்கான சாந்தக் குரலில்: "இன்று கலை விழாவின் கடைசித்தினம். **நவரெத்தினம்** எனக்காகக் காத்துக்கொண்டிருப்பார்".

**முத்துநாயகம்** அவ்வளவு உறுக்கிப் பேசியிராவிடில் அவள் போவதை நிறுத்தியிருப்பாள். ஆனால் என் இஷ்டம் போல வாழ எனக்குச் சுதந்திரம் உண்டு என அவர் அறியச்செய்வது அவசியம் என எண்ணினாள். இன்றென்ன, என்றும் உறுக்கிப் பேசுபவன் முத்துநாயகம். இன்று அவன் மேசையருகிலிருந்து கணக்குப் பார்க்கும்பொழுது அவனுடைய முகத்தில் விளக்கொளிபடவில்லை. பட்டிருந்தால் கவலைபடர்ந் முகத்தைக் கண்டு ஏங்கியிருப்பாள்.

எத்தனையோ நாட்களாக எடுத்த ஏற்பாடல்லவா. இதற்கெனச் சேலையும் இன்று காலைதானே வாங்கிவந்தாள். இல்லை, போய்த்தான் ஆகவேண்டும்.

"ஏன்? இன்று போவதில் என்ன குறை? என்று கேட்ட கெம்பீரப் பார்வையை அவன் கவனித்தான்.

"ஏனும்! எல்லாவற்றிற்கும் நான் காரணம் சொல்லவேண்டுமா? என் சொல் இந்தவீட்டிற் செல்லாதா?... சரி போய்விட்டு வா; இங்கு தனித்திருக்க உனக்குப் பிடியாது".

"பிடியாது தான். அன்றியும்...... என் துணை இல்லாமல் உங்கள் அலுவல் பார்க்கலாம் தானே. இச்சாமவேளை என் உதவி உங்களுக்குத் தேவையிராதே".

"தேவையே இல்லை", என்றான், கவலையற்ற தொனியில்.

அவள் அறையை விட்டு வெளியேறினாள். "என்னைப்பற்றி அவருக்கு எள்ளளவேனும் கவலையில்லை. அவரும் அவருடைய வியாபாரமும் கணக்கும் தான். பற்று வரவுக்காரர் வந்தால் என்னைத் திரும்பியும் பார்க்கமாட்டார்", என்று சொன்னவள் கன்னத்தில் உருண்ட நீர்த்திவலைகளைக் கைக்குட்டையால் ஒத்திக்கொண்டாள். புறப்படுமுன் "மீனாட்சி, எனக்காக விழித்திராதே", என்று கூறிவிட்டு டக்ஸியில் போய்விட்டாள். அவள் போவதைப் பார்த்திருந்த மீனாட்சி: "இதென்ன மோசம்! ஐயா வீட்டிலே இருக்காரு; அம்மா ஓட்டத்திலே போறா", என்று சொல்லி நாடியைத் தோளில் அடித்துக்கொண்டாள்.

மூன்று ஆண்டுகளுக்குமுன் **முத்துநாயகம் — கேட்டி** மணப்பேச்சு நடக்கும்பொழுது வியாபாரி மதியூகியான முத்துநாயகம் கேட்டியைக் கட்டுவானே? அவளுடைய நெளிப்பிலும் சிரிப்பிலும் அவிந்துவிடுவானே? எனச் சவால் விடுத்தனர் அவ்வூரார். அவன் வயதிற்கு அவளை மகள் என்றல்லோ பார்த்தவர் எண்ணுவர் எனவும் கூறிக்கொண்டனர். எதிர் பாராதது நடந்தேவிட்டது.

கேட்டி, முத்துநாயகத்தை விரும்பினவள் அல்ல. அவளுடைய தாய் தான் அந்தக் கலியாணத்தைச் செய்யும்படி தூண்டினாள். "நீ காலாட்டிக்கொண்டிருந்து சாப்பிடலாம். அவன் முதிசக்காரன். அவனுக்கு கடையால் வரும்படி, பெரிய தெருவில் இரண்டு வீடுகட்டி வாடகைக்கு விட்டிருக்கின்றான். அதில் ஒன்றும், பளையில் உள்ள தென்னந் தோட்டத்தில் அரைவாசியும், கிளிநொச்சியில் பத்து ஏக்கர் நெற்காணியும் கலியாணத்துக்கு முன் எழுதுகிறதென்று பேச்சு. இப்படி யார் தந்து முடிப்பார்"?

"என் கணவர் என்னைக் காதலிப்பதையே நான் முதல் ஆசிக்கிறேன்" எனக் கேட்டி முகஞ்சிவக்கக் கூறினாள்.

"காதலும் கத்தரிக்காயும்! அவனுடைய வயதிற்கு அவன் இராமனாக முடியுமா? உன்னைச் சங்கையாய் நடத்தினால் போதுமே", என்றாள் தாய்.

கேட்டி—முத்துநாயகம் திருமணம் கோலாகலமாக நடந்தது. பெரிய தெருவிலிருந்த முத்துநாயகம்வீட்டில் புதுத்தம்பதிகள் குடித்தனம் நடாத்தி வந்தனர். ஆரம்பகாலத்திலிருந்த விருந்துகள் கொண்டாட்டங்கள் முடிய வீட்டு விவகாரத்தையேற்பாள் என முத்துநாயகம் எதிர்பார்த்தான். தங்கள் குழந்தை இருவரையும் ஒன்றிக்கும் பந்தனமாகும் என எண்ணினான். ஆனால் அந்த அற்ப உயிர் சில மணித்தியாலங்களுக்கே நிலைத்தது. பின் கொண்டாட்டங்கள் முன்னையிலும் பார்க்க அதிகரித்தன.

உன்னுடைய வயதிற்கு அவர் தோதில்லை; காசுக்காக அன்றி அன்பிற்காக அவள் உன்னை முடிக்கவில்லை", என முத்துநாயகத்தின் சிநேகிதர் கூறியதை அவன் உண்மையென உணர்ந்தான். கேட்டி எதிர்பார்த்த காதல் கூதலாகிவிட்டது. இருவர் மனமும் இருவழிகளிற் சென்றன. முத்துநாயகத்தின் முகத்திற் கவலை படர்ந்தது.

அன்றைய கலைநிகழ்ச்சிகளைக் கேட்டி இரசிக்கவில்லை. நிகழ்ச்சிகளின் இடையே முத்துநாயகத்தின் உறுக்காட்டியப் பேச்சு ஞாபகத்திற்கு வந்தது. சிலகாலமாக அவனுடைய முகத்தில் கவலை படிந்திருந்ததையும் எண்ணி ஆச்சரியப்பட்டாள். சாப்பாட்டுவேளை அரைகுறையாகத்தான் சாப்பிட்டார்; அதிகம் பேச்செடுக்கவில்லை...வீட்டுக்குத் திரும்பவேண்டும் போலிருந்தது. பக்கத்திலிருந்த **நவரெட்ணத்துக்கு** "ஒரே வெக்கையும் வெயர்வையுமாயிருந்தது" என்று கூறி லேஞ்சியால் விசுக்கினாள். "பின் விசிறியை முடுக்கி விடுகிறேன்" எனக்கூறி எழுந்தான், "இடைவேளை ஆயிற்று குளிர் பானம் கொண்டுவருகிறேன்" என்று மண்டபத்தை விட்டு புறப்பட்டான்.

அச்சமயம் இருவர் அவளுக்குப் பின் இருந்த ஆசனங்களில் வந்து அமர்ந்தனர். "**சுந்தரம்!** என்ன தனியே இருக்கிறாய்?" "நாமும் நம்ம கவலையும்" என்று பதிலிறுத்தான். அவன் அவ்விடம் வந்த **குமார்**, தாழ்ந்[illegible] குரலில், "முத்துநாயகத்துக்கு பெருந[illegible] நஷ்டமாமே" என்றான். "நல்ல மனிதருக்கு இப்படித்தான் பொல்லாங்கு. கல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல அவருக்கு வந்தாள் மனைவி" ... பூனை அரவம் கே[illegible] எலி போன்று. பேச்சைக் கூர்[illegible] கவனித்தாள் கேட்டி. "ராஜன் ரெக்ஸ்[illegible] [illegible]துக் கழித்து[illegible] எங்களுக்கு விற்பார்கள்" என்றான் குமார். பக்கத்திலிருந்தவன், "நம்முடைய மனைவிமார் எல்லாரும் அவளிடத்தில் பிச்சை வாங்கவேண்டும், உடை அலங்காரத்திற்கு", என்றான். "உள்ளவள் உடுத்தினால் உனக்கு ஏன் எரிச்சல்?—குமார். "முதலாளிபெண் இங்கு வந்திருக்கவேண்டும்; ரிக்கட் எடுத்ததாகச் சொன்னார்" என்றான் சுந்தரம். இடைவேளை முடியும்நேரமாகியது, வந்தவர்கள் வேறிடத்திற்குச் சென்றார்கள்.

நவரெட்டிணம் குளிர்பானத்துடன் திரும்பினான். "எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லை; வீட்டிற்குப் போக வேண்டும், ஒரு டாக்ஸி பிடித்து விடுங்கள்" என்று கேட்டி கேட்டது அவனுக்கு இடிவீழ்ந்தது போலிருந்தது. "ஏன் ஏதும் வருத்தமா?" எனப் பரபரப்புடன் வினவியதற்கு, அவள் மீண்டும் "என்னை டாக்ஸியில் ஏற்றிவிடுங்கள்" எஸ்று வினயமாய்க் கேட்டாள்.

இருவரும் மண்டபத்தைவிட்டுவெளியேறினர். வீதியருகே நின்ற விளக்குத் தம்பத்தடியில் அவளை நிறுத்திவிட்டு, டாக்ஸியைக் கூப்பிடச் சென்றான். டாக்ஸி வந்ததும் அவள் நன்றி கூறி, உள்ளே ஏறிவிட்டாள்; நவரெட்ணம் இறங்கவேண்டிய இடத்தைச் சாரதிக்குச்சொல்லி, சேமமே வீடு சேர்க்கும்படி கூறினான்.

வீட்டிற்குச் சென்றதும், கதவைத் திறந்துவிட்ட மீனாட்சி, அரை நித்திரையில், கேட்டி கேட்ட கேள்விக்கு, அவள் போய்ச் சற்றுப்பின் புருஷன் வீட்டைவிட்டு வெளியே சென்றார், என்றாள்.

புருஷன் கிளப்புக்குச் சீட்டாடப் போயிருக்கலாம் என எண்ணினாள் கேட்டி. என்னமோவெல்லாம் சொல்லித் திட்டமிட்டிருந்தாள் மனதில். வரும் வழியில் தன் கவலையினதும், பிடிவாதம், ஆடம்பர வாழ்வு அனைத்தையும் மன்னிக்கும்படி கேட்க, ஏழையாய்வாழ்ந்து இன்னல் பல அனுபவிக்க தான் ஆயத்தமெனக் கூற—ஆனால் அவர் போய்விட்டாரே.

கொடுக்கல் வாங்கலில் நஷ்டப்பட்டவர்கள், அல்லது கடன் வாங்கி, பின் கொடுக்க வழியற்றவர்கள் இந்தியாவிற்குக் கள்ளமாய் ஓடினார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறான். ஆனால், முத்துநாயகம் அப்படி அநியாயம் செய்யக்கூடியவரல்லவே. அவனுடைய சொந்த வருவாய்ப்பணம் ஞாபகத்தில்வர, அதை அவருக்குக் கொடுத்துவிட்டால் திரும்பவும் தொழில் நடக்கும். ஆனால் அம்மா அதற்கெல்லாம் என்ன சொல்வாவோ, என எண்ணியவாறே றேடியோ இருந்த மேசை அருகே சென்றாள். சென்றவள் சீறும் சிங்கத்தைக் கண்டவள் போல் பின்வாங்கினாள்.

மேசையின் மேல் ஒரு சிறு குப்பி. அதனுள் சொற்ப மருந்து. மணந்து பார்த்தாள் ஆரோசிகமாயிருந்தது. "பொலிடொல்" குடித்து விட்டு வீட்டில் இறவாமல் வேறிடத்திற் சென்றுவிட்டார். தெரு, தேவரீர்க்குளம், பண்ணைக்கடல் எல்லாம் அவளுக்குத் தென்பட்டன மனதில். தனது கணவன் தற்கொலை புரிந்துவிட்டார் என்று முடிவுகட்டினாள். அதற்கு அவள் தானே காரணம். அவளுடைய ஆடம்பரவாழ்க்கை, அர்த்த இராத்திரியில் கலா மண்டபம்; கட்டற்ற கேளிக்கைகள், வீட்டில் செப்புவார்த்தை...... போதும்! இனி இருந்து என்ன? இறந்து என்ன? மனதில் எழுந்த வெறுப்பும் கசப்பும் அவள் புத்தியைக் [illegible]. [illegible]ரைப்போல் நானும் [illegible] பரவாயில்லை; வீரப் பெயராவது கிடைக்கும் என எண்ணி, குப்பியிலிருந்த சொற்ப மருந்தைக் குடித்துவிட்டாள். சாய்வு கட்டிலிற் சாய்ந்தாள்; மரணத்தை எதிர்பார்த்து!

வாய்மட்டும் கசந்தது, வயிற்றுள் ஏதோசெய்தது, முடிவு சீக்கிரம் வரும் எனக் கண்ணை மூடிக்கொண்டாள்.

வாசற்படியில் மிதிதடிச்சத்தம் கேட்டு விழித்தாள். இழவு கோட்க எழுந்து சென்றாள். "செத்துப் போனீர்கள் என்றல்லோ கவலைப்பட்டேன். வயிற்றுக்குள் எரிவில்லையா?" "நாடகம் நன்றாயிருக்கிறது கேட்டி" என்று கூறிவிட்டு அவளுடைய தலைவிரி கோலத்தையும் கண்ணீர் ததும்பும் கண்களையுங் கண்டு என்ன நடந்தது என விசாரித்தான்.

மண்டபத்தில் கேள்விப்பட்டதையும் தான் விரைந்து வந்ததையும் விரித்துரைத்தாள். "உங்களை வீட்டில் காணாதபடியால், பணமிழந்த கவலையில் தற்கொலைசெய்துவிட்டீர்கள் என எண்ணிக் கவலைகொண்டேன்" என்றாள் விம்மல் பொருமலுடன். **"பணமிழந்து நட்டப்பட்டது உண்மைதான். அதற்காக என் ஆத்துமத்தை இழப்பதா? என்ன மடமை. கடவுள் இந்த உயிரை இரவல் தந்தார். உயிர் இருக்குமளவும் நாம் அவரின் பிள்ளைகளாய் வாழவேண்டும். இழந்த பணத்தைத் தேடலாம், ஆனால் இறந்த ஆத்துமம் திரும்ப வருமா? திருந்த வழியிருக்கும் போது அகாலமாய்ச் சாவது அநியாயம், அக்கிரமம்."**

நீங்கள் "பொலிடொல்" குடிக்கவில்லையாயின் இந்தக்குப்பி?

நீங்கள் "பொலிடொல்" குடித்து இறந்துவிட்டீர்கள் என எண்ணி நானும் குப்பியில் மிகுதியாயிருந்ததைக் குடித்துவிட்டேன். வயிற்றில் என்னவோ செய்யுமாப்போல் இருக்கிறது.

இதுவா? இது மீனாட்சி நாரிப் பிடிப்பிற்குப் பூச வாங்கிவந்த தைலம். மீனாட்சி கொஞ்சம் உப்புக்கொண்டுவா வயிற்றாலே போகக்கொடுக்க.

"அப்படியானால் வெளியில் ஏன் சென்றீர்கள்?" நீ திரும்பிவரும்வரை தனித்திருக்கப்பிடிக்கவில்லை; எனவே கடலோரத்தில் உலாவச்சென்றேன்". "உங்களுக்கு எவ்வளவு இளகிய நெஞ்சம்! இன்றுவிட்டேன் கொண்டலடி. இனிமேல் இன்பத்திலும் துன்பத்திலும்; எமது வாழ்விலும் தாழ்விலும் நான் உங்களுடன்; போதும் இந்த நீர்க்குமுழி வாழ்வு."

விற்பனைக்கு:

### தபசுகாலத்துக்குரிய நிருபங்களும் சுவிசேஷங்களும்

இச்சிறு நூல் தபசுகாலத்தில் அநுதின பூசையில் வாசிக்கப்படும் நிருபங்களையும் சுவிசேஷங்களையும் கொண்டு விளங்குகிறது. அத்துடன் ஆரோகணத்திரிதினப் பூசைநிருபங்களும், புரட்டாசியில்வரும் சதுர்காலப் பூசைநிருபங்களும், இணைக்கப்பட்டுள்ளன.

பிரதி விலை கிளேஸ்பேப்பர் ரூபா 2-00.
,, பைபிள் பேப்பர் ரூபா 2-25.

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

### அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 25-ந்தேதி சனிவாரம் பி. ப. 4 மணியளவில் வழமைப் பிரகாரம் சஞ்சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். அவ்வமயம் சிலசகோதரிகள் சபைவார்த்தைப்பாடு எடுப்பார்கள். ஆகவே எல்லோரும் சபைஅங்கி தரிக்க வேண்டும். கூட்டமுடிவில் பகுதித்தலைவர்கள்சங்கம் நடைபெறும்.

A. S. FRANCIS OF MARY,
சபைக்கர்த்தருக்காக

செப அப். சபை வெளியீடு

### மாசி மாதம்

**பொதுக்கருத்து:** திருச்சபைப் பொதுச்சங்கத்திற்கு அவசியமான தயாரிப்புகள் சாதகமானமுறையில் முன்னேறும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து:** அரசியல் சுதந்திரம் பெறமுயலும் மக்கள் பொதுநன்மைக்கு எதிரான போங்குகளில் செல்லாதிருக்கும்படியாக மன்றாடிக்கொள்வது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## டக்றர் வில்லியம் ஜேம்ஸன்

1923-ம்ஆண்டுமுதல் 1933-ம்ஆண்டுவரை மானிப்பாயிலுள்ள கிறீன்ஞாபக வைத்தியசாலேயின் பிரதமவைத்தியராக விளங்கியிருந்து சிறந்தவைத்தியராகப் பிரஸ்தாபம்பெற்றிருந்த டக்றர் வில்லியம் ஜேம்ஸன்அவர்கள் 23வருடங்களின்பின் தாம்முன்னர் வைத்திய தொண்டாற்றிய யாழ்ப்பாணத்தைச் சந்திப்பதற்காகத் தம்முடைய புதல்வர்களான டக்றர் டபிள்யு ஜே. ஜேம்ஸன், டக்றர் ஜி. எஸ். ஜேம்ஸன் என்பவர்களோடும், தமது புதல்வியும், மருகருமான எம். ருஸ்னக் தம்பதிகளோடும் வந்துசேர்ந்து, இங்கு தங்கியிருந்த ஐந்துதினங்களிலும் சென்றவிடமெல்லாம் பெருங் குதூகலத்துடன் வரவேற்று உபசரிக்கப்பெற்றூர். மானிப்பாய் வைத்தியசாலேயிலே அவருக்கு அளிக்கப்பட்ட பரிமளிப்பான பொதுவரவேற்பிலே பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்து அன்புகனிய அவருக்குத் தங்கள்நன்றியைத் தெரிவித்துநின்றூர்கள். யாழ்ப்பாணக் கல்லூரியில் அளிக்கப்பட்ட விருந்துஉபசாரணேயும் சம்பிரமமாக நடந்தேறியது.

## முஸ்லீம்களின் தாய்மொழி

இலங்கைமுஸ்லீம்களின் தாய்மொழி தமிழாகவே இருக்கவேண்டுமெனச் சென்றபுதன்கிழமை கொழும்பில்நடந்தேறிய முஸ்லீம்கல்விமான்களது மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்டுள்ளது. இந்தமுடிவை அடிப்படையாகக் கொண்டு முஸ்லீம்மக்களின் மொழிக்கொள்கைபற்றிய மனுஒன்றைத் தயாரிக்குமாறு உயர்தரமுஸ்லீம் அரசாங்க அதிகாரிகளேக்கொண்ட கமிற்றிஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்தமனுவைஅது தயாரித்து முஸ்லீம்பாராளுமன்ற அங்கத்தவர்களிடம் சமர்ப்பிக்கும். அவர்கள்அதைப் பிரதமரிடம் சமர்ப்பிப்பார்கள்.

## 2கோடியே 15லட்சம்ரூபா கேட்கின்றூர் கல்விமந்திரி

புதியபாடசாலேகளேக் கட்டுவதற்கும், தற்போது இருந்துவருகிற ஆசிரியபயிற்சிக் கலாசாலேகள், பாடசாலேகளேப் பழுதுபார்ப்பதற்கும், விஸ்தரிப்பதற்குமாக உடனடியாய் 2கோடியே 15லட்சம்ரூபா தரவேண்டுமென்று மந்திரிசபையிடம் கல்விமந்திரி கேட்டிருக்கின்றூர். "நாட்டின் சிலபகுதிகளிலே புதிதாகச்சேரவரும் பிள்ளேகளுக்குப் பாடசாலேக் கட்டடங்கள் இடவசதியைக் கொண்டில்லே; தற்போதுள்ள ஆசிரியபயிற்சிக் கல்லூரிகளே விஸ்தரிப்பதற்கும், பழுதுபார்ப்பதற்குமாக அரசாங்கத்துக்கு 25லட்சம்ரூபா செலவேற்படும்; இந்தவேலே உடனடியாகச் செய்யப்படாவிடின் ஆசிரியர்களுக்கான பயிற்சித்திட்டத்தின் முன்னேற்றத்திற்குப் பங்கம்ஏற்படும்; இன்னும் நிதிபோதாதகாரணமாக நின்றுபோன வேலேகளேத் திரும்பத்தொடக்கநடத்த 70லட்சம்ரூபா செலவிடப்படவேண்டிவரும்" என்றெல்லாம் அவர் மந்திரிசபைக்கு அனுப்பியுள்ள மனுஒன்றிலே தெரிவித்திருக்கின்றூர்.

## பூநகரியும் காணிக் குடியேற்றமும்

பூநகரிப்பிரிவைச்சேர்ந்த பல்லவராயன்கட்டுப்பகுதியிலே, பூநகரி–மன்ஞர் வீதியிலுள்ள காரியாலே நாகபட்டுவான்குளத்தைத் திருத்தியமைக்கும் திட்டம் பூர்த்தியாகின்றது. இத்திட்டத்தின்கீழ் குடியேற்றப்படுகிறவர்கள் அப்பகுதியில் விவசாயமும், தோட்டமும் செய்வதற்குக் காணிவசதி அளிக்கப்படவிருக்கின்றூர்கள்.

## சிறைச்சாலேச் சிங்கள வகுப்பு

யாழ்ப்பாணச் சிறைச்சாலேயிலே அச்சிறைச்சாலே அதிகாரியால் கடந்த ஓராண்டுகாலமாக நடத்தப்பட்டுவந்த சிங்களவகுப்பை நிறுத்தவேண்டிய நிலேமை தற்போது ஏற்பட்டுள்ளது. இந்தவகுப்பிலே யாழ்ப்பாணக் கச்சேரியைச்சேர்ந்த முப்பதுபேருக்குமேற்பட்ட அரசாங்கஊழியர்கள் சிங்களம் கற்றுவந்தனர். ஆனுல், கடந்த இருவாரங்களாக வரவுமிகக்குறைந்து இப்போது ஒன்பதுபேர்மட்டுமே வகுப்பிற்குச் சமூகமாயிருக்கின்றனர். இந்தநிலேமையிலே வகுப்புவிரைவில் நிறுத்தப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## குருநாகல்தொகுதி உபதேர்தல்

சனப்பிரதிநிதிகள்சபையிலே காலியாயிருக்கும் குருநாகல்தொகுதிஸ்தானத்திற்குஅபேட்சகர்களாக ஐவர்முன்வந்து சென்றவியாழக்கிழமை குருநாகல்கச்சேரியிலே தங்கள்நியமனப்பத்திரங்களேச் சமர்ப்பித்துள்ளனர். அவர்களின் நாமங்கள் வருமாறு: (1) திரு. ஐயபத்திராஞ (ல. சு. க.) இவர் ஓர்அப்புக்காத்து. (2) திரு. டி. பி. வெலகெதற (ஐ. தே. க.) குருநாகல்மேயர். (3) திரு. டி. எம். ஜி. டபிள்யு. நாரம்பனுவ (சுயேச்சை) திருமதி ஏ. எல். தெல்கொட (சுயேச்சை) திரு. எச். விஜயதுங்க (விமுக்திபெரமுனே) ஐவரிலும் திரு. ஐயபத்திராஞ ஓர்அப்புக்காத்து. கடந்த பத்துவருடங்களுக்குமேல் குருநாகலில் தொழில்பார்த்து வருகின்றூர். திரு. வெலகெதற ஒருமுன்னுள் டி. ஆர். ஓ. 1956-ம் ஆண்டுவரை பாராளுமன்றத்திலே குருநாகல் பிரதிநிதியாக இருந்தவர். திரு. எச். விஜெயதுங்க கண்டியிலுள்ள தர்மராஜகல்லூரியில் ஓர் ஆசிரியர். திருமதி டெல்கொட ஓர்ஆசிரியை. திரு. நரம்பனுவே ஒரு தோட்ட முதலாளியாவர். குருநாகல், இரத்கமை உபதேர்தல்கள் பங்குனி 29-ந்திகதி புதன்கிழமை நடந்தேறவிருக்கின்றன.

## இரத்கமைத் தொகுதி உபதேர்தல்

சனப்பிரதிநிதிகள்சபையிலே காலியாயிருக்கும் இரத்கமைத்தொகுதிஸ்தானத்திற்கு நால்வர் அபேட்சகர்களாக முன்வந்து சென்றவியாழக்கிழமை தங்கள் நியமனப்பத்திரங்களேக் காலிக்கச்சேரியில் சமர்ப்பிக்கலாயினர். அவர்களின் நாமங்கள் வருமாறு: (1) திரு. டி. ஈ. திலகரத்ஞ (ல. சு. க) இவர் சென்றவாரம் இதற்கென்று இலங்கைப் போக்குவரத்துச்சபை உயர்பதவியை இராசிநாமாச்செய்தவர். (2) திரு. நோர்மன் ஜே. வைத்தியரத்ஞ (ஐ. தே. க.) இவர் ஒரு அப்புக்காத்து. (3) திரு. எம். ஜி. மென்டிஸ் (க. க.) திரு. கே. ஜஸ்ரின் டிசில்வா (எம். ஈ. பி.)

## மாத்தளே உபதேர்தல்

சனப்பிரதிநிதிகள்சபையிலே மாத்தளேப்பிரதிநிதியாய் இருந்துவந்த திரு. பேஞட் அலுவிகாரை காலஞ்சென்றமையாலே காலியாயிருக்கும் அந்தஸ்தானத்திற்கு அபேட்சகர்களாக முன்வருவார் தங்கள் நியமனப்பத்திரங்களேச் சமர்ப்பிக்கவேண்டியதினம் அடுத்த பங்குனிமாதம் 1-ந்திகதியெனக் குறிக்கப்பட்டிருக்கிறது.

## அக்கராயன்குள வேளாண்மை

அக்கராயன் குளக்கட்டை உயர்த்தும்வேலே இப்போது பூர்த்தியடைந்து அதன் இடதுகால்வாய் நீர்ப்பாசனத்துக்கு உதவக்கூடியதாகிவிட்டது. அதனுல் அப்பகுதியிலே மலாயன் பென்ஷன்காரருக்குச் சொந்தமான ஆயிரம்ஏக்கர்நிலத்தில் இம்முறை சிறுபோகவேளாண்மைக்குப் போதிய தண்ணீர் கிடைக்குமென்று சொல்லப்படுகிறது. இன்னும்சீனிக்கம்பெனி ஒன்று அப்பகுதியில் 500ஏக்கர்காணியிலே கரும்புப்பயிர்செய்யவிருக்கிறதென்றும், எஞ்சியுள்ள காணி விவசாயிகளுக்கு வழங்கப்படுமென்றும் தெரியவருகிறது.

## முத்துக்குளிப்பு

1961-ம்ஆண்டின் முத்துக்குளிப்பைக் கடற்தொழில்பகுதி இம்மாத இறுதியிலே மன்ஞர்க்குடாக்கடலில் ஆரம்பிக்கவிருக்கிறது. கற்பிட்டிக்கும், மன்ஞருக்குமிடையிலே கரையிலிருந்து பதினெட்டுமைல் தூரத்திற்கப்பாலுள்ளபகுதியில் முத்துக்குளிப்பு நடைபெறும். இம்முறை குளிப்பதற்கு எண்பதுலட்சம் முத்துச்சிப்பிகள் [illegible]க்குவமடைந்திருப்பதாகக் கண்ட[illegible]யப்பட்டிருக்கிறது. இவற்ருல் இரண்டரைலட்சம்ரூபாவருமானம்கிடைக்குமென மதிப்பிடப்படுகிறது. "நோர்த்ஸ்ரூர்", "கனடியன்" என்ற இருகனடியயந்திரப்படகுகள் முத்துக்குளிப்[illegible] ஈடுபடும். அதனுல் குளிகாரர் [illegible]தேவைப்படமாட்டார்கள்.

# டீ மசனட் ஆண்டவரும் இலங்கையும்

இவ்வருடம் அமலோற்பவ மரியநாயகியின் பரித்தியாகிகள் சபையின் ஸ்தாபகரான அதிபர் இயூஜின் டீ மசனட்ஆண்டவர் அவர்களது மறைவின் நூற்ருண்டு பூர்த்தியாகின்றது. இச்சந்தர்ப்பத்தில் அவர் தமது சீவியகாலத்திலேயே இலங்கைக்குச்செய்த பேருதவிகளே இலங்கைக் கத்தோலிக்கமக்கள் நன்றியறிதலுடன் நினைவுகூர்ந்து, அவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் விரைவில் கிடைக்கவேண்டுமென்று அமலனேப் பிரார்த்தித்தல் பொருத்தமாகும். பின்வரும் வரலாற்றுக் கட்டுரை அம்பிற்றியா அமலமரி பரித்தியாகிகள் கல்விக்கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்கிய வண. சகோ. பி. ஜே. ஏ. சமரக்கோன், ஓ. எம். ஐ. அவர்களால் எழுதப்பெற்றது. — ஆசிரியர்

"கத்தோலிக்க சமயமானது கெட்டழிந்து போகின்றது. சன்மார்க்கம் சிதைக்கப்பட்டும், விசுவாசம் தணிக்கப்பட்டும் வருகின்றன. பெரும்பாலான கத்தோலிக்க மக்களுக்குச் சுற்றுப்பிரகாரங்களிலும் வாணவிளேயாட்டுக்களிலும் இன்னும் இவைபோன்ற வெளி ஆடம்பரங்களிலுமே சமயம் தங்கியிருக்கின்றது. விசுவாசிகள் தேவதிரவிய அனுமானங்களேத் தப்பிதமாகப் பெறுகின்றனர். இவர்களுக்கு வேண்டிய ஞான உதவிகளே அளிப்பதற்குப் போதிய குருப்பிரசாதிகள் எம்மிடத்தில் இல்லே. இதனுல் தற்போதைய கத்தோலிக்கரின் நிலேமை அஞ்ஞானிகளின் நிலேமையிலும் பார்க்க மிகக் கேவலமாக இருக்கின்றது. துன்மார்க்கக் கொள்ளேநோயானது, காட்டுத்தீபோல் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகப் பெரும்பாலான கத்தோலிக்கரைத் தனக்கு இரையாக்கிக்கொண்டே வருகின்றது. காமாதுரரும் சிற்றின்பப்பிரியரும் அதிவேகத்துடன் கத்தோலிக்கர் மத்தியில் அதிகரித்துக்கொண்டு வருகின்றனர். துன்மார்க்க விருட்சமானது ஆழமாக வேரூன்றி, நாலாபக்கமும், விழுதுவிட்டு வளருகின்றது. இதன் ஆணிவேரிலே கோடரிவைக்க எங்களிடம் குருப்பிரசாதிகள் இருந்தாலோ!...... துன்மார்க்க ஆதிக்கத்தின்கீழ் இருக்கும் கத்தோலிக்கருடைய இருதயங்களிலே விசுவாசமானது உறங்கிக்கிடக்கின்றது. உறங்கிக்கிடக்கும் இவ் விசுவாசத்தைத் தட்டிஎழுப்பிப் புத்துயிர் ஊட்ட அந்தோ! எங்களிடம் குருக்கள் இல்லாது பரிதவிக்கின்றோம். இந்நிலேயில் இவர்களே விட்டுவிடுவோமேயாயின் இவர்களுடைய விசுவாசம் பரிதிமுன் பனிபோல் நிர்மூலமாக்கப்பட்டுவிடும். ஆகையால் அமலோற்பநாயகியின் நாமத்திஞலே நாம் உம்மிடம் ஓலமிடுகிறோம். எங்கள் அபயச்சத்தத்திற்குக் கொஞ்சம் செவிசாய்த்து உம்முடைய அமலோற்பவியின் பரித்தியாகிகளிற் சிலரை எம்முடன் அனுப்பியருளும்.........."

இதுதான், முன்னுள் இலங்கைப்பதில் மேற்றிராணியாராய் இருந்த **ஒருசியோ பெத்தக்கினி** ஆண்டவர் அவர்கள், தற்போது ஓ. எம். ஐ. என்று வழங்கப்பெறும், அமலோற்பவ மரியநாயகியின் பரித்தியாகிகள் சபைத் தாபகரும், மாசெயில்ஸ் நகர மேற்றிராணியாண்டவருமான **சாள்ஸ் யோசவ் இயூசின் டீ மசனட்** ஆண்டவர் அவர்களிடம் தாழ்மையாகக் கேட்டுக்கொண்ட விண்ணப்பம்.

அமலோற்பவ மரியநாயகியின் பரித்தியாகிகள் இலங்கைக்கு வருமுன் அர்ச். பிலிப்புநேரியோருடையதியான சம்பிரதாயக் கூட்டத்தைச் சேர்ந்த குருக்கள், இலங்கையிலுள்ள கத்தோலிக்கரைப் பரிபாலித்து வந்தார்கள். ஒல்லாந்தர் இலங்கையில் எழுப்பிய வேதகலாபனேயின் பொழுது இக்குருக்கள் தங்கள் அயராமுயற்சியிஞலும், தணியாவூக்கத்திஞலும் இலங்கைக் கத்தோலிக்கருடைய இருதயங்களிலே எரிந்து கொண்டிருந்த விசுவாசச்சுடரை அணேய ஒண்ணுமல் பாதுகாத்துக் கொண்டுவந்தார்கள். ஆனுல் ஆங்கிலேயருடைய வருகையோடு கத்தோலிக்க சமய அனுசரணேக்குப் பூரண சுதந்திரம் அளிக்கப்படவே இக்குருக்கள் தனித்துத் தொண்டாற்ற முடியாதவராயினர். இவ்வாறு 50 வருடகாலமாக ஞான உதவிகள் இன்றி, அஞ்ஞானிகள் மத்தியில் கைநெகிழ்ந்து விடப்பட்ட கத்தோலிக்கரின் நிலேமை எப்பேர்ப்பட்டதாய் இருந்திருக்கும் என்று நாம் ஒருவாறு ஊகித்துக்கொள்ளக்கூடும். இத்தகைய நிலேயில்இருந்த ஆயிரமாயிரம் கத்தோலிக்கருக்கு அச்சிறியதொகையினரான குருக்கள் தனித்துத் தொண்டாற்றுவதெங்ஙனம்?

டீ மசனட் ஆண்டவர் அவர்களேப் பத்தொன்பதாம் நூற்ருண்டுச் சின்னப்பர் என்று கூறின் அது மிகையாகாது. அர்ச். சின்னப்பரிடத்தில், உலகம் முழுவதையும் யேசுநாதருடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரவேண்டுமென்றிருந்த தணியாதஆசைதான் இவரிடத்தில் முக்கிய இடம் பெற்றிருந்தது. இத்தகைய அப்போஸ்தலிக்க தொண்டன் பெத்தகினி ஆண்டவருடைய வேண்டுகோளேக் கேட்டதும் எவ்வளவு விசனப்பட்டிருப்பார்என்பது சொல்லாமலே விளங்கும். இருந்தும், இலங்கைக்கு அனுப்பிவைப்பதற்குக் குருப்பிரசாதிகள் அவரிடம் அப்போது இல்லே. இவர்தாபித்த அமலமரியின் பரித்தியாகிகள் சபை அப்பொழுது தன் குழவிப்பருவத்திற்ருன் விளங்கிற்று. சபையிற்சேர்ந்திருந்த சில

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### அடையாளங்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| † | கடன் திருநாள் | மா. | மாசற்ற இருதயமாதாவின் பூசை யைத் தெரியலாம் |
| 1 | 1-ம் வகுப்புத் திருநாள் | | |
| 2 | 2-ம் வகுப்புத் திருநாள் | ம. | மரித்தோர் பூசையைத் தெரியலாம் |
| யே. | யேசுவின் திரு இருதயப் பூசை யைத் தெரியலாம் | (வி. ம.) | பூசையில் விசுவாசமந்திரம் |
| | | ஒ. | ஒருசந்தி நாள் |

### மாசிமாதம் — 1961

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | ஞா. | 1 | தபசுகால முதலாம் ஞாயிறு (வி. ம.) | [ஊ] |
| 20 | தி. | | காலதினம் | [ஊ] |
| 21 | செ. | | காலதினம் | [ஊ] |
| 22 | பு. | 2 | அர்ச். இராயப்பரின் சிம்மாசனம் (வி. ம.) அர்ச். சின்னப்பர், ஞா. ஒருமித்து — சதுர்கால புதன், ஞா. | [வெ] |
| 23 | வி. | | காலதினம் — அர்ச். தமியான் இராயப்பர், ஞா. | [ஊ] |
| 24 | வெ. | 2 | அர்ச். மத்தியாஸ் அப்போஸ்தலர் — சதுர்கால வெள்ளி, ஞா. (வி. ம.) | [சி] |
| 25 | சனி | | சதுர்காலச் சனி | [ஊ] |

சத்திய வேத
# பாதுகாவலன்
1961-ம் ஆண்டு
மாசிமாதம் 16-ந் திகதி

## தபசுகாலம்

நேற்றையதினம் விபூதித் திருநாளோடு தபசுகாலம் ஆரம்பமாகியுள்ளது. இத்திருநாளில் நிறைவேறும் ஒரு விசேடதிருச்சடங்கு யாது? குருவானவர் மந்திரித்தவிபூதியை ஒவ்வொருவரது நெற்றியிலும் சிலுவையடையாளமாகப் பூசி, "ஓ, மனிதா! நீ தூசியாயிருக்கிறாய்; திரும்பவும் தூசியாய்ப் போவாயென்று நினைத்துக்கொள்" ளென்று சொல்லி அறிவுறுத்துவதே. அக்காலத்திலே மக்கள் தபத்தின் அறிகுறியான சாம்பரைத் தங்கள் சிரசின்மேல் தூவிக்கொண்டு தங்கள் பாவங்களுக்காகத் தங்களை ஒறுத்துக் கடின தபஞ்செய்து வந்தார்கள் என்பதை நாம் அறிவோம். யோனாஸ் தீர்க்கதரிசியால் எச்சரிக்கப்பட்டதும் நினிவேநகர் அரசனும், பிரசைகளும் எத்துணை கடுந்தபம் புரிந்தார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

திவ்விய இரட்சகரும் தம்முடைய திருப் போதகத்தினால் சகலரையுமே தபஞ்செய்யும்படி கற்பித்திருக்கின்றார். நீங்கள் தபஞ்செய்யாவிட்டால் அப்படியே சேதமாவீர்களென்று சொல்லி எச்சரித்திருக்கின்றார். அவரே வனாந்தரத்தில் நாற்பது நாள் கடின உபவாசமாயிருந்து தபஞ்செய்து மாதிரிகாண்பித்திருக்கின்றார். அவரின் முன்னோடியான அர்ச். ஸ்நாபக அருளப்பர் வனாந்தரத்தில் கடுந்தபம் புரிந்து தம்மிடம் திரள்திரளாக வந்த மக்களைத் தபஞ்செய்யுமாறு தூண்டியிருக்கின்றார். லூர்துகெபியிலே, பாத்திமாபதியிலே, மற்றும் புனித தலங்களிலே நம் திருவன்னை காட்சியளித்தபோதெல்லாம் தபம், தபமென்று அழுத்தமாகவும், ஆணித்தரமாகவும் கூறித் தபசின் ஆவசியகத்தை ஆனமட்டும் எடுத்துக் காட்டியிருக்கின்றார். திருச்சபையும் நமது நெற்றியில் விபூதியைப் பூசும்படி செய்வித்துப் பாவிகளான நாமும் தபசு செய்ய வேண்டுமென்பதை ஞாபகப்படுத்துகின்றது. ஆகவே, நாம் விபூதியை ஒப்பாசாரத்திற்குப் பூசிக்கொண்டதாகக் கருதாது அது சுட்டிக்காட்டும் தபசை மனோற்சாகத்துடன் செய்ய வேண்டும்.

சர்வதுர்க்குணமுள்ள மானிட சரீரம் கட்டுக்கடங்காத ஒரு குதிரைக்குச்சமானம். அப்படியான ஒருகுதிரையைக் கடிவாளம், குதிமுள், சவுக்குஆதியன கொண்டு அடக்கிக்கீழ்ப்படுத்தாவிடில் என்ன சம்பவிக்கும்? ஆளையும் அது கீழே தள்ளித் தானும்வெறிகொண்டு தாறுமாறுகவோடிப் பள்ளத்தில் விழுந்துமாளும். அவ்விதமே மனிதனும் பாவதுர்க்குணமுள்ள தனதுசரீரத்தை ஒறுத்தடக்கிக் கீழ்ப்படுத்தாவிடில் அதுவும் ஆத்துமத்தைப் பாவத்தில்விழச் செய்து, அத்தோடு தானும்நரக பாதாளத்தில்விழுந்து பாழாகும். தன்னைப்படைத்துப் பரிபாலித்துவரும் சாட்சாத்கடவுளையே இல்லையென்று சாதிக்கின்ற இன்றையஉலகை — கண்டதே காட்சி கொண்டதேகோலமென்றுஅலைகடல்துரும்புபோல் உலைகின்ற உலகை—உண்டு, குடித்து, உடுத்துமகிழ்வதே மெய்யின்பமெனக் கருதிப் பொய்யின்பக் கடலில்மூழ்கிக் களிக்கின்றஉலகைப் பேரழிவினின்றும் காத்துவைக்கவேண்டுமானல் முக்கியமாகக் கையாளப்படவேண்டிய இருமுக்கிய சாதனங்களில்ஒன்று தபமென்பதை நாம்மனதிற்கொள்ளவேண்டும்.

நமதுசரீரம் நற்சுகம்பெற்று இன்பமாகவாழத் தேகாப்பியாசம் எத்துணை அவசியமோ அவ்விதமே நமதுஆத்துமமும் நற்சுகம்பெற்று நித்தியபேரின்பத்தைச் சுகித்துவாழத் தபம் அத்துணை அவசியம். மாசுற்றபசும் பொன் கம்மாளன் உலையில் புனிதமாவதுபோல்பாவமாசுற்ற நமதுஆத்துமமும் தபசென்னும் உலையில் புனிதமடையவேண்டும். உலகம், சரீரம், பிசாசுஎன்னும் மூச்சத்துருக்களையும் எதிர்த்துப் போராடத் தபசென்னும் கேடயத்தை நாம் கையாடாதேபோனல் அதில் வெற்றிகாண்பது அசாத்தியம். பாவப்பிணியால் வாடும் மக்கள்அனைவருக்கும் தபசென்னும்திவ்வியமருந்து மிகவும் ஆவசியகம். ஆகவே,நமது நெற்றியில் சிலுவையடையாளமாக மந்திரித்தவிபூதி பூசப்பெற்றதை நமதுமனக்கண்முன்பாக வைத்து எப்போதும், விசேடமாக இந்தத்தபசுகாலத்திலும் ஒருசந்தி, உபவாசம், சுத்தபோசனம், ஒறுத்தல், பஞ்சபுலன்கள், ஆசாபாசங்களை அடக்குதல் ஆதியாம்தபமுயற்சிகளால் [illegible]பாவங்களுக்குப் பரிகாரந் தேடப் பாடுபடுவோமாக!

# தபத்தை அடுத்ததா நம் வாழ்வு?

மெய்ஞ்ஞான ஒளியிலே துலங்கிக்கொண்டிருக்கும் கத்தோலிக்காகிய நாம் அஞ்ஞான இருளிலே அமிழ்ந்தும் எம்சகோதரரைத் திருத்தவேண்டின் எமது நடத்தையைத் திருத்த வேண்டும். நாம் எம்மைத் திருத்தினாலொழிய, எம்மைக் கண்டு பாவிக்கும் மற்றவர்கள் தம்மைத் திருத்தமாட்டார்கள். இதையிட்டுத்தான் "உனது கண்ணிலிருக்கும் உத்திரத்தை எடுத்துவிட்டு உன்சகோதரனின் கண்ணிலிருக்கும் துரும்பை எடுக்க முயலு" என்று யேசுக்கிறீஸ்துநாதர் கூறுகிறார். சென்றஆடிமாதம் மருதமடுப்பதியிலே நிகழ்ந்த உற்சவத்தினபோதும் எமது யாழ்ப்பாண மேற்றிராணியார் அவர்கள் எம் எல்லோரையும் உண்மையான கத்தோலிக்கசீவியம சீவிக்கும்படியே வினயமாக வேண்டினார். தன் சீவிய காலத்தில் தன்னைத் திருத்திக்கொள்ளாதவன் மரணத்தருவாயில் தன்னைத் திருத்தமாட்டான். ஏனெனில், சீவியம் எப்படியோ மரணமும்அப்படியே.

தேவன் எம்மீது கொண்ட பட்சத்தின் காரணமாகத் தம் சாயலாகவே எம்மைப் படைத்தார். அவர்சாயலாகப் படைக்கப்பட்ட நாம் அவர் தந்த அழியா ஆத்துமத்தை இரட்சிக்க வழி தேடவேண்டும். எமது வாழ்க்கை — எமதுசீவியம், நாம் பரலோகபிரயாணிகள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

ஆத்தும இரட்சணியமதான் எத்தகையது? பரலோகத்தில் நாமடையும் பாக்கியம் சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசிப்பதே. தேவனின் தரிசனை பெற்று அவருடன் ஒன்றிக்கும் நம் ஆத்துமம் தூயதாய் இருக்கவேண்டும். மேலுலகில் மகிமை பெறுவதற்கு இவ்வுலகில் நேர்மை கடைப்பிடிக்க வேண்டும். சொல்லிலும் செயலிலும், போதனையிலும் சாதனையிலும் தூய்மை இருப்பின் நேர்மை தானே பிறக்கும்.

எவனொருவன் தன்னையடக்கித் தேவனுக்கு உகந்தவனாக நடப்பானோ அவன்தான் மோட்ச இராச்சியத்தினுட் பிரவேசிக்கமுடியும். சோம்பேறி, அகங்காரி, காமாதுரன், இன்பப் பிரியன் மோட்ச இராச்சியத்தினுட் பிரவேசிக்கமாட்டான். செப தப, தான தருமங்களின்றி ஒருவன் மோட்ச இராச்சியத்தினுட் பிரவேசிப்பது முடியாத காரியம்.

பாவச் சமயங்களை விலக்கி, பாவச் செயல்களை அகற்றிநடப்பதற்கு எமது சுயபெலம் போதுமானதல்ல. எனவே, பாவச் சமயத்தை விலக்கவும், பாவச் சமயங்களில் வெற்றிபெறவும் தேவனிடம் அருள் பெறவேண்டும். இதையிட்டுத்தான் "விழித்திருந்து செபம் பண்ணுங்கள்" என்று வேதவாக்கியம் எம்மை வற்புறுத்துகின்றது. செபம் பற்றிக் கூறுமுகமாக, அர்ச். அல்போன்ஸ் லிகோரியார் "செபியாதவன் மோட்ச இராச்சியத்தினுட் பிரவேசிக்கமாட்டான்" என்கிறார். செபம்செபியாதவனைப் பிசாசு அனுப்பத் தேவையில்லை; ஏனெனில், அவன் தானே தனக்குப் பிசாசாக இருக்கிறான்" என்று அர்ச். பெரிய தெரேசம்மாள் கூறுகிறாள். இவ்வகையாக நாம் செபத்தின் மூலமே மோட்சம் சேரமுடியும் என்பது தெளிவாகிறது.

இன்றைய உலகின் நம் நிலையை எண்ணினால் மோகத்தின் வேகம் நம்மைப் பாவத்தின் பாதையில் உந்திச் செல்கிறது எனலாம். விரிந்து செல்லும் விஞ்ஞான அறிவைக்கொண்டு பரந்த சமுதாயத்தையே படைக்கும் பரனை மக்கள் பகைக்கிறார்கள். தேவனைப் பகைத்தல் அவர்களின் பாவவிருத்திக்கு வழிவகுக்கிறது. இன்று மோகச் சேற்றிலே அமிழ்ந்தும் நீசப் பாவிகளின் எண்ணிக்கை எண்ணுந்தரமன்று. "உலகின் திரளான ஆத்துமங்கள் மோக பாவத்தின் காரணமாகவே நரகத்தில் விழுகிறார்கள்" என்று பரிசுத்த கன்னிமரியம்மாளே பாத்திமாவில் கூறிவிட்டாள். இக் கொடிய பாவத்தைத் தேவன் எவ்வளவு தூரம் வெறுக்கிறார் எனில், இப்பாவங்களில் அமிழ்ந்திய நகரங்களை (சொதோம், கொமாறு) நெருப்பிட்டழித்தாரன்றோ! "தேவனின் ஆலயம்" என அர்ச். சின்னப்பரால் வருணிக்கப்பட்ட எங்கள் சரீரங்களை மோகபாவம் காரணமாக நாம் அசுசிப்படுத்துவோமானல் நாம்நிர்மூலமாக்கப்படுவோம். "இறந்த ஒருவனை உயிர்ப்பிப்பதிலும் பார்க்க, ஒரு மோகபாவியை மனந்திருப்புதல் கடினம்" என அர்ச். வின்சென்ட் பெரேர் கூறினார். ஆகவே, உன்னத சருவேசுரன் வெறுக்கும் இக்கொடிய பாவத்தை விலக்கி நடக்க நாம் தெண்டிக்கவேண்டும்.

செபமும் தபமுமே இதை இலகுவாக ஜெயிக்கும் வல்லமைஉடையவை. தபம் செய்வதன் மூலம் நாம் தேவனையும், தேவதாயையும் நன்கு பிரியப்படுத்துகிறோம். "நீங்கள் தபம் செய்யாவிடில் ஒருமிக்கச் சிதைந்து போவீர்கள்" என்று யேசுநாதர் கூறியிருக்கிறார். தபத்தின்மூலம் நாம் எம்மை ஒறுக்கவேண்டும். கர்த்தர் உலகில் வாழ்ந்தபோது நாம் இரத்தம் சிந்தி, நம் சுபாவத்தை அடக்கவேண்டும் என நிரூபித்திருக்கிறார். ஆகவே, தபத்தின் மூலமாவே செபத்தில் ஒன்றித்து நாம் பரலோகம் செல்லமுடியும்.

ஆனல், நம் நிலையை எண்ணும்போது தபத்தை அடுத்ததா நம் வாழ்வு? என்று நமக்கே தெரியவில்லை. விஞ்ஞானமும் விரிசிந்தையும், சூழலும் சுற்றுப்புறமும் பொய்யான போதகத்தையே போதிக்கின்றன. போதாக்குறைக்கு நம்நாட்டு அரசியல் சூழ்நிலையும் எம்மை மிருகவர்க்கமாக மதிக்க முயலுகிறது. நெருக்கடி தொடருகிறது. பூலோக நெருக்கடி தொடருவதால் எமது பரலோகபாதையைப் பக்குவப்படுத்துவது எமது தலையாய கடமையன்றோ! ஆகவே, நம் நிலை திருப்தியானதா என்று சிறு விஞடி சிந்தித்துப் பார்த்தல் நன்மை பயக்கும்.

ம. க. யோட்ஸ்,
பருத்தித்துறை.

## பூசைப்பலியில் பங்குபற்ற பாப்பரசர் விரும்பும் முறை

"குருவானவரின் செபங்களுக்குப் பதில்கொடுத்தும், பூசைப்பாட்டுகளைப் படித்தும், சற்பிரசாதம் அருந்தியும் செயல்முறையில் பூசை ஒப்புக்கொடுப்பதே நாம் விரும்பும் முறை." "இந்தத் திவ்விய பலியை ஒப்புக்கொடுப்பதற்கு ஆயத்தப்படுத்துவதிலும, அதை நிறைவேற்றுவதிலும் குருமாரும், விசுவாசிகளும் எப்போதும் கரிசனை கொள்ளவேண்டும் என நாம் பெரிதும் ஆசிக்கிறோம்; பிரசங்கம் சபையாருக்கு ஏற்றதாயும், உள்ளத்தைத் தொடக்கூடியதாயும் அமையவேண்டுமெனினும் சுருக்கமாயிருக்கவேண்டும்; சற்பிரசாதம் உட்கொள்வதுடன் பலி உண்மையாகவே பரிபூரணமாகின்றது" என்று பாப்பரசர் 23-ம் அருளப்பர் அண்மையில் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பாறையிலெழுந்த சத்திய திருச்சபை

**இம்மாதம் 22-ந்தேதி அர்ச். இராயப்பரின் சிம்மாசனத் திருநாள் கொண்டாடப்படுகின்றது. அன்றிருந்து இன்றுவரை கத்தோலிக்க திருச்சபையைப் பரிபாலித்த பாப்புமார் பற்றிய சுவையான தகவல்கள் தரப்படுகிறது இக்கட்டுரையில்.**

"நீ கல்லாயிருக்கிறாய். இக்கல்லின் மேல் நாம் திருச்சபையைக் கட்டுவோம்; நரகத்தின்வாசல்கள் அதை மேற்கொள்ளமாட்டா" எனக் கூறி அர்ச். இராயப்பரை முதல்வராகக் கொண்டு திருச்சபையைத் தாபித்தார் கிறிஸ்துபெருமான். இராயப்பர் பெயரால் இன்றுவரை 262பாப்புமார் சத்தியதிருச்சபையைப் பரிபாலித்துவந்துள்ளனர்.

இதுவரையுள்ள பாப்புமாரில் ஆட்சிபீடமேறிய போது மிகஇளைஞராகவிருந்தவர் **12-ம்அருளப்பர்.** கி. பி. 955-இல் தெரிவுசெய்யப் பட்டபோது இவருக்கு வயது பதினாறு மட்டுமே. அடுத்த இளம்பாப்பு 18-ம்வயதில் திருச்சபையின் தலைவரான **9-ம்ஆசிர்வாதப்பர்.** இவரின் மாமன்மார்இருவர் பாப்புமாராய் இருந்திருக்கின்றனர். வயதில்முதிர்ந்த பாப்புஎன்றபெருமை கிரீக்சாதியினரான **அர்ச். அகாதோ** என்பவருக்குரியது. இவர் தமது 103-ம் பராயத்தில் தெரியப்பட்டு 3வருட ஆளுகையின்பின் 681-இல்மரித்தார். **4-ம் அனஸ்தாசியுஸ்** 90-ம்வயதிலும், **3-ம் செலஸ்ரின்** 85-ம்வயதிலும் பாப்புமாராகத் தெரியப்பட்டுள்ளனர்.

அதிகவருடங்கள் திருச்சபையைப் பரிபாலித்தவர் **9-ம் பத்திநாதர்.** 32 வருடங்கள் இவரதுஆட்சி நீடித்தது. அர்ச். இராயப்பரும், 13-ம்லீயோவும் 25வருடங்கள் ஆட்சிசெய்தனர் வேறு ஒன்பது பாப்பரசர்கள் 20–25வருடங்கள் இராயப்பரின் சிம்மாசனத்தை அலங்கரித்துள்ளனர். ஆயின், ஆறுவாரங்கட்குக்குறைவாகச் செங்கோல் செலுத்தியவர்களும் உண்டு. **2-ம் ஸ்ரிபன்** 752-ம்ஆண்டு பாப்புவாகத் தெரியப்பட்டு நாலுதினங்களின் பின்னர் மரித்தார். **5-வது ஸ்ரிபன்** மரித்த அதேதினத்தில் **1-வது பாஸ்கால்** தெரியப்பட்டார். 1271-இல் பத்தாவது கிரகோரியார் பாப்புவாகத் தெரியப்படுவதற்குமுன்னர் 3வருடங்கள் திருச்சபை தலைவரின்றியிருந்தது. மூன்று தடவைகளில் பாப்புதேர்தல் முடிவடையச் சிலவருடங்கள் பிடித்திருக்கின்றன. திருமணமான **2-வது அதிரியன்** 855-இல் பாப்புவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருச்சபைத் தலைவர்பதவியை ஏற்றுக்கொள்ளத் திட்டமாக மறுத்துவிட்டபடியால் பின்னர் வேறொருவரைத் தெரிந்தனர். 858-இல் மீண்டும் தேர்தலில் தெரிந்தெடுக்கப்பட்டும் அவர் மறுத்துவிட்டார். ஆயின், மூன்றுவதுமுறையாக 867-இல் தேர்ந்தெடுக்கப் பட்டபோது இது தேவசித்தம் எனக்கருதி ஏற்றுக் கொண்டார்.

மூன்று கண்டங்களிலிருந்து கிறிஸ்துவின் பிரதிநிதிகள் தெரியப்பட்டுள்ளனர். ஐரோப்பாவே அதிகமான பாப்புமாரை அளித்திருக்கிறது. 80சதவிகிதமானோர் இத்தாலியர். இவர்களுள் 12-ம்பத்திநாதர் உட்பட 106பேர் ரோமையர்கள். 16பிரான்சியரும், 14 கிரீக்நாட்டவரும், 6ஜெர்மானியரும், 6சீரியரும், 3ஸ்பானியரும், 2யூகோசிலாவியரும் திருச்சபையின் தலைமைப் பதவியைப் பெற்றிருக்கின்றனர். கிறிஸ்துவின் பிரதிநிதிஎன்ற பெருமையைப் பெற்ற ஒரேயொருஆங்கிலேயர் **4-வது அதிரியான்** ஆவர். இன்றைய பாப்புவிலிருந்து முன்னோக்கின் தொடர்ந்து 42பாப்பரசர்கள் இத்தாலியராகவே இருக்கின்றனர். இம்முறை இனிமேல் மாற்றமடையக் கூடும். கர்திநல்மார் திருச்சங்கத்தில் இத்தாலியரல்லாதோரின் தொகை கூடியுள்ளது. ஆகவே எதிர்காலத்தில் ஆபிரிக்க அல்லது ஆசிய சுதேசியொருவரும் பாப்புவாகலாம்.

ரோமைநகருக்கு வெளியேயும் பாப்புமார்தேர்வு பலஇடங்களில் நடத்தப்பட்டுள்ளது. 9-ம்நூற்றாண்டுவரை விசுவாசிகளும் பாப்பானவரைத் தெரிவதில் பங்கெடுத்துக் கொண்டனர். **5-வது ஸ்ரீபன்** ரோமை மக்களால்மட்டுமே தெரியப்பட்டார். அரசர்களும் பாப்புமாரைநியமித்திருக்கின்றனர். 1049-ல் ரோமைச் சக்கரவர்த்தியால் **9-ம் லீயோ** நியமிக்கப்பட்டதுடன் இவ்வழக்கம் நிறுத்தப்பட்டது. **2வது நீக்கிலாஸ்**பாப்பு திருச்சபைத் தலைவரைத் தெரியும்உரிமையைக் கருதினல்மார் திருச்சங்கத்துக்கு உத்தியோகபூர்வமாக வழங்கினர். கருதினலல்லாதவரையும் திருச்சபைத்தலைவராகத் தெரிவுசெய்ய விதிகள் இடமளிக்கின்றன. ஆயின் அம்முறை **6-வது ஊர்பான்** என்றபாப்புவின் தேர்தலுக்குப்பின்னால் கைவிடப்பட்டது.

33பாப்புமார் வேதத்துக்காகப் பிராணனைக்கொடுத்தனர். சித்திரவதைகளை அனுபவித்தனர் போர்த்துக்கேயரான **21-ம் அருளப்பர்** விக்றர்போ எனுமிடத்தில் படிப்பறையில் வாசித்துக் கொண்டிருக்கும்போது கூரைஇடிந்து விழுந்ததால் மரித்தார் **1-வதுமார்ட்டின்** ருஷியாவுக்கு நாடுகடத்தப்பட்டுப் பசியாலும், பட்டினியாலும் வாடி இறந்தார். **7-வது கிளமென்ற்** இறப்பதற்குச் சிலவருடங்களின் முன்னரே பார்வையிழந்து தவித்தார்.

அர்ச். இராயப்பருட்படப் பலஆதிகால பாப்பரசர்கள் திருமணமானவர்கள். **அர்ச். கோர்மிடாஸ்** என்ற பாப்புவின்புதல்வரும் பின்னர் சில்வேரியுஸ் என்றபெயருடன் பாப்புவானர். பலன்களை அறிமுகப்படுத்திய 19-ம் அருளப்பர், 8-ம்ஆசிர்வாதப்பரின் சகோதரர். 9-ம்ஆசிர்வாதப்பர் இவர்களின் மைத்துனர்.

பாப்புமாருள் ஒருவர் கிறிஸ்துநாதரின் அப்போஸ்தலர். மூவர் அப்போஸ்தலர்களின் சீடர்கள். ஐம்பதுக்குமதிகமானோர் மடாதிபதிகளும், சந்நியாசசபைகளைச் சேர்ந்தவர்களும். ஆசிர்வாதப்பர் துறவிகள் 24பேரும், 4சிஸ்ரரின் துறவிகளும், பிரான்சிஸ்கன் சந்நியாசிகள் நால்வரும், டொமினிக்கன் துறவிகள் நால்வரும் பாப்புபீடத்தை அலங்கரித்திருக்கின்றனர் 1846-இல் தெரியப்பட்ட **16-ம் கிரகோரியார்** பாப்புவுடன் இவ்வழக்கம் நிறுத்தப்பட்டது.

81விதமான நாமங்களும் பாப்புமாரால் தெரியப்பட்டன. இராயப்பர் என்ற நாமத்தைத்தாங்கியவர் ஒருவர் மட்டுமே. சின்னப்பர் 5; லீயோ 13; இன்னோசெந்த் 13; கிளமென்ற் 14; ஆசிர்வாதப்பர் 15; கிரகோரி 16; அருளப்பர் 23. பாப்புவாகத் தெரியப்பட்டபின் தம்பெயரை மாற்றிக்கொள்ளும்வழக்கம் 2-ம்அருளப்பரில் ஆரம்பமாயது மூன்று வாரங்கள்மட்டுமே ஆட்சிசெலுத்திய 2-வது மார்செல்ஸ் என்பவரே பாப்புவானபின்னும் தம் சொந்தநாமத்தை உபயோகித்தவருள் கடைசியானவர்.

திருச்சபையின் தலைவர்கள் பாப்பு என **அர்ச். சிரியக்கஸ்** காலத்திலிருந்தே அழைக்கப்பட்டனர். ஆடம்பரமாக அர்ச்சியசிட்ட பட்டம்சூட்டும் வைபவம் அர்ச். உல்ரிச்பாப்புவால் ஆரம்பிக்கப்பட்டது. ஒருபோதுமே சவரம்செய்துகொள்ளாது தாடிவளர்த்தவர்களுள் 8-வது ஸ்ரிபன் விசேடமானவர். **2-வது சில்வேஸ்தர்** பாப்பு கணித, விஞ்ஞான சாஸ்திரங்களில் நிபுணர். முதலில் விமானம், நீர்மூழ்கிக் கப்பல்களில் பிரயாணம்செய்தவர்என்ற பெருமை 12-ம்பத்திநாத பாப்புவுக்குரியது. சினிமாவிலும், ரெலிவிஷனிலும்கூட இவரே இதுவரை அதிகமாக மக்களைக்கவர்ந்த பாப்புவாக விளங்குகிறார். பல்லாயிரக்கணக்கான தரிசகர்களைத் தம்ஆட்சிகாலத்தில் வரவேற்றவர் என்பதுடன் ஏககாலத்தில் மிகஅதிகமான — அதாவது 32கருதினல்மாரை நியமித்தவர்என்ற சிறப்பும் இவருக்குண்டு.

பாப்புமார்பற்றிப் பிரபலஆங்கில வரலாற்றுநிபுணர் மக்கோலே கூறியிருப்பதுஇங்கு குறிப்பிடத்தக்கது: "ஆடம்பரமும், பாடோபமும்கொண்டு நேற்று வாழ்ந்த மன்னர்களை இன்று காணோம். இன்று வீரமும், ஊக்கமும் கொண்டுமுன்னேறும்சர்வாதிகாரிகளை நாளைகாணோம். ஆயின், பாப்புஸ்தானத்தை அன்று ஆரம்பித்த அர்ச். இராயப்பர் தொடக்கம் இன்றுவரை எந்நாளும் குறைவுறாது இயங்கிக் கொண்டிருக்கும் ஒரேயொரு ஆட்சிபீடம் இராயப்பரது சிம்மாசனம் தான்."

**சா. பெ.**

---

# "யுத்த அகதிகளின் தந்தை"

## வண. பீயர், ஓ. பி., சுவாமியார் ஆற்றிய தனிமுயற்சியின் வெற்றி

அவர்கள் அகதிகள்; கடந்த யுத்தத்தின் கேடுகளை அனுபவித்தவர்கள். அதிகார பூர்வ அறிக்கையின்படி, வயதோ, சரீரபலவீனமோ, தொழில் அறிவின்மையோ காரணமாக சமூகத்துக்கு உதவாதவர்கள்.

அகதிகள் முகாங்களையோ, சிசுபரிபாலன நிலையங்களையோ தரிசித்த சாமிநாதசபைச் சந்நியாசிஒருவர் இவ்வபிப்பிராயத்தை ஒப்புக்கொண்டாரில்லை.

முதலாம் உலகமகாயுத்தத்தின் போது பெல்ஜியத்தில் சிறுவனாயிருந்த இவர், இல்லத்தை இழக்க நேர்ந்தது. இரண்டாம் மகாயுத்தத்தின்போது முகாங்களிலிருந்த அகதிகள் பரிபாலனச்சிக்கல்களுக்குப் பலியாகாதிருக்க வேண்டுமெனத் துணிந்தார். இரண்டாவது மகாயுத்தத்தின் போதும் அதற்கு முன்னும் பெல்ஜியத்தில் மீசாம்வேலைபார்த்துக்கொண்டிருந்தார்; ஆனால் 1953-ல் இருந்து பாரியதோர்பணியில் ஈடுபட்டார். இவரதுபணி பாராட்டப்பட்டு நோபல் பரிசு வழங்கப்பெற்றார்.

அகதிகளுக்கு மூதலுதவியாக ஆதரவாளரை[illegible] எவரும் கைவிடவில்லை என உற்சாகமூட்டும் கடிதங்களை அகதிகளுக்கு அனுப்புவார். பின் பொருளுதவி ஆற்றுவெள்ளம் என வந்துகொண்டிருந்தது. இருப்பிடங்களை முதல் அமைத்தார்; பின் "ஐரோப்பிய கிராமங்கள்" அமைக்கத் தொடங்கினர். இப்பொழுது இத்தகைய ஆறு கிராமங்கள் உண்டு. அங்குள்ள குடும்பங்கள் எல்லாவற்றிற்கும் பீயர் சுவாமியாரே பொறுப்பாளி.

மனுத்தன்மையற்ற சமூகத்தினரால் புறக்கணிக்கப்பட்ட இருள்சூழ்ந்த இவர்கள், சுவாமியாருடைய செயலால் கிறிஸ்துவசிநேக ஒளியைக் காண்கிறார்கள்.

இச்சேவைக்காகச் சுவாமியார் மலைபோன்ற தடைகளையும் மேற்கொள்ளவேண்டியிருந்தது. நோபல் பரிசுபெற்ற காலத்திலிருந்து தமக்கு மனநிம்மதியே இல்லை என்று சுவாமியார் தாமே கூறியிருக்கிறார். ஆயினும், தடைகளை மேற்கொண்டு, அகதிகளுக்கு உதவவேண்டுமென்ற அடங்காத்துடிப்பைத் தமக்குக் கடவுளே தந்தாரென எண்ணி அமைதி [illegible]

---

# டமசனட் ஆண்டவரும்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கத்தினர் பிரான்ஸ், சுவிற்சலாந்து, இங்கிலாந்து, ஸ்கொத்திலாந்து, அயர்லாந்து, கனடாமுதலிய தேசங்களுக்குச்சென்று கடினதொண்டாற்றி வந்தனர். இதற்கிடையில் தென் ஆபிரிக்காவுக்கும் சில குருக்களை அனுப்புவதாக டமசனட்ஆண்டவர் வாக்குப்பண்ணிவிட்டார். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்திலேஇருந்த இம் மேற்றிராணியாண்டவர் அனுபவித்த மனநோவு எத்துணையென்று இயம்ப முடியாது. ஆயினும், பெத்தக்கினி ஆண்டவர் அவர்கள் பிடிவாதமாக நின்றுகொண்டார்: "நீர் குருக்களை அனுப்பாதுவிடின், அந்தோ! இலங்கைக் கத்தோலிக்கமக்கள் சாத்தானுக்கு இரையாகிவிடுவார்கள்" என்று திரும்பவும் ஓலமிட்டனர்,

"தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் போதிக்கும்படி என்னை அனுப்பினார்" (லூக், IV, 18) என்று இசையாஸ் தீர்க்கதரிசி யேசுக்கிறீஸ்துநாதரைக் குறித்துச் சொன்னவாக்கியத்தைத் தன்வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு, மிகவும்கைநெகிழப்பட்டுப் பரிதாபநிலையில்இருக்கும் ஆத்துமாக்களுக்குச் சுவிசேஷத்தைப் போதிக்கும் நோக்கத்துடன் தன்சபையைத் தாபித்த இத்தேவதொண்டன், பெத்தக்கினிஆண்டவர் அவர்களுடைய வேண்டுதலைமறுக்கமுடியாதவரானார். "தாமதமின்றி குருக்கள்சிலர் உமக்கு அனுப்பப்படுவார்கள்" என்று பதிலளித்தார். இஃது, இவர் தேவன் தமக்குத் தேவையான குருப்பிரசாதிகளைத் தந்தருளுவார் என்று தேவனிற்கொண்ட பூரண நம்பிக்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இவ்விதமே இலங்கைக் கத்தோலிக்கமக்கள் அந்த அமலோற்பவ அன்னையின் பரித்தியாகிகளின் பாதுகாவலின்கீழ் ஒப்படைக்கப்பட்டனர். டமசனட்ஆண்டவர்தாமே, யோண் ஸ்ரீவன் செமேரியா, லூயிஸ் மறியா கீற்றிங், யோசெவ் அலெக்சாண்டர் சியாமின்என்னும் குருப்பிரசாதிகளையும், சகோ. யோண்ஸ்பாட் டீஸ்ரெவானிஸ் என்பவரையும் தெரிந்தெடுத்துப் பெத்தக்கினிஆண்டவர் அவர்களுடன் இலங்கைக்கு அனுப்பிவைத்தார்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

## அறுவடைக்குப் புறப்படுங்கள்!

**அன்புமிக்க இளைஞர்களே!**

"உழவர் அறுவடை செய்யாவிடில் உலகம் பெரும் மகிழ்வடையாது. நிலத்தை உழுது பயிரிட்டு, நீர்பாய்ச்சி, களைவெட்டி, கண்மணிபோல் பயிரைக்காத்து இன்று சாய்ந்துநிற்கும் கதிரைக் கையிலே அரிவாள்ஏந்தி உழவர் அறுவடை செய்யும் காட்சியின் மாட்சிதான் என்ன!"

மனதின்கண்ணால் இக்காட்சியைக் காணும்போது கடவுளின் தெய்வீக வார்த்தையொன்று எம்மனதில் உதிக்கின்றதல்லவா? "அறுப்பு மிகுதியாய் இருக்கின்றது, வேலையாட்களோ மிகவும்கொஞ்சம்" (மத், 9, 37) என்று யேசுநாதர் ஓர்முறை கூறியவசனம் எம்காதுகளில் தொனிக்கின்றது.

எம் செல்வநாட்டில் கிறீஸ்துஇராசாவே எம்இரட்சகர்என அங்கீகரிப்போர் நூற்றுக்கு ஏழுவீதம்மாத்திரமே, அம்மட்டன்று; இச்சிறுபான்மையோரையும் அழித்தொழிக்கக் கொம்யூனிஸ்த நாஸ்திகர் சமீபத்தில் கையாடிவரும் முறையானது எம்மைத் திடுக்கிடப்பண்ணுகின்றதே.

எனவே கிறீஸ்துவை அறியாதார்உள்ளத்தில் கிறீஸ்துஎன்னும் வித்தை விதைத்து, அன்புஎன்னும்உரமிட்டு, அறிவுஎன்னும் நீர்பாய்ச்சி, கத்தோலிக்க பயிர்வளர்த்து அறுவடைசெய்ய ஆட்கள்தேவை. கனல்தெறிக்கும் ஆர்வத்துடன் தீமைசெய்யும்படி அணிவகுத்து நிற்கும் மேற்கூறப்பட்ட சத்துராதிகளின் சதியாலோசனைகளை மடுத்தடிக்கும்படி ஆர்வத்தாலும், பத்தியாலும், புத்தியாலும் சிறந்த இளைஞர்தேவை, அனுபவம்படைத்த முதியோர்தேவை, களங்கமற்ற பாலர்கள்தேவை. தத்தம் நிலைபரத்துக்கு ஏற்றவாறு பொறுப்பேற்று நடத்தவேண்டிய ஊழியர்கள் திருச்சபையில் பலவுண்டு. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவதொண்டில் ஈடுபட்டுஉழைத்தல் அவசியம். இத்தேவையை உணருகின்றீரா? இளைஞர்பக்கத்திற்குஎழுதி அறிந்துகொள்ளவும்.

ஞானப்பிதா

—(※)—

# தபசுகாலம்

## "மண்ணால் உண்டாக்கப்பட்ட நீ திரும்பவும் மண்ணாய்ப் போவாய்"

— மேரிறேசலின் சூசைப்பிள்ளை —

மேற்குறிப்பிட்டவாக்கியம் சருவேசுரனால் ஆதாமிற்குச் சொல்லப்பட்டதாகும். விபூதித்திருநாளன்று திருச்சபையும் எமக்கு இவ்வாக்கியத்தை நினைவூட்டி நாம்மரணத்திற்கு உட்பட்டிருக்கிறோம் என்பதை நமக்கு ஞாபகப்படுத்துகின்றது. நமது இரட்சகர் வனாந்திரத்திற் செலவிட்ட நாற்பதுநாட்களை நினைவுகூரவும், உத்தானத்திருநாளுக்கு ஆயத்தகாலமாகவும், விசுவாசிகள் பொதுமுறையிற் தபக்கிரிகைகளைப் புரிவதற்கு வசதியாகவும் விபூதித்திருநாளின் பின்வரும் நாற்பது நாட்களையும் திருச்சபை தபசுகாலமாக ஏற்படுத்தியுள்ளது.

திவ்வியயேசுவின் திருப்பாடுகளையும், தேவதாயாரின் வியாகுலங்களையும் உருக்கமாய்த் தியானிப்பதுடன் நின்றுவிடாது, தமதீடில்லா இரக்கப் பெருக்கத்தினாலும், நன்மைத்தனத்தினாலும் எம்மை நரகினின்று மீட்பதற்காகத் தம் நேயகுமாரனையே பலியாய்ஈய்ந்த பரமபிதாவின் நீதியைச் சாந்திபண்ணும்முறையில் உண்மையான மனஸ்தாபமும், உறுதியான பிரதிக்கினையும் இரண்டறக்கலந்து நிற்கும் தபசையே நாம்புரியவேண்டுமெனத் திருச்சபை விரும்புகின்றது. மனஸ்தாபமும், பிரதிக்கினையும் அற்ற வெறுந்தபசு நமக்குஎப்பயனையும் அளிக்கமாட்டாது. மனதின் ஓர் பகுதி தபம்புரிய மறுபகுதி இரமந்தப்பின பற்றுதல்களிலும், ஐம்புலன்களின் இச்சைகளிலும் உழன்றுகொண்டிருக்குமாயின்,தபசுஎதற்கு? இந்நிலையை விளக்கவே "ஒரு ஊழியன் இருஎஜமான்களுக்குப் பணிபுரியமுடியாது; ஏனெனில், ஒருவனை நேசித்து மற்றவனைப் பகைப்பான்" என யேசுநாதர் கூறியுள்ளார். மரியாதைக்குறைவான ஆடைகளைக் களைந்தெறியாமலோ மதுப்பற்றை மனதிலிருந்து அகற்றாமலோ இருக்கும்வரையும் நமதான்மா நித்திய கேட்டின் வாயிற்படியில் நிற்கின்றது என்று சொல்லுவதே சரியாகும். குடிவெறியும், மரியாதைக்குறைவான உடைநடையும் எம்மையும், பிறரையும் ஏககாலத்தில் நரகிற்கு அழைத்துச்செல்லும் இரட்டைப்பிறவிகள் என்பதைச் சிந்தையிலிருத்துவோம்.

எமது ஆன்மாக்களின் பாவமாசு நீக்கத் தெய்வீக தேசுபொலிந்த தம் மேனியிற் தேவசுதன்பட்ட வேதனைகளை நம் மனக்கண்முன்நிறுத்தி இத்தபசுகாலம் நம்ஆன்மவாழ்வின் மறுமலர்ச்சிக்காலமாக அமையும்வண்ணம் அதை ஆரம்பிப்போம். இன்னுமோர்முறை எமக்கு இத்தகைய சந்தர்ப்பம் அளிக்கப்படுமாவென்பது சந்தேகம். அதற்குமுன் மரணம் எம்மைஅணுகித் தேவசந்நிதானத்திற்கு அழைத்துச்செல்லவும் நேரிடும். தேவநடுவர் திவ்வியயேசு இஷ்டப்பிரசாதமின்றி நிர்வாணியாய் இருக்கும் எம்ஆன்மாவை நோக்கி: "நிர்ப்பாக்கிய ஆத்துமமே! என் இரத்தத்தை இறுதித்துளிவரை சிந்தி நிஷ்டூரமரணமடைந்து உன்னை என்றும் அர்ச்சித்து, திடப்படுத்தி, போஷிப்பதற்கேற்ற தேவதிரவிய அனுமானங்களையும் ஏற்படுத்தி உனக்கு அளித்தேன். அனைத்தையும் அலட்சியம் செய்துவிட்டாய். ஆகையால் இப்போது ஆக்கினைக்கு உட்பட்டிருக்கிறாய்" என்பார். எனவே, இத்தகைய தீர்ப்புக்கு உள்ளாகாதபடிக்கு இனிமேலாகிலும் முயற்சி செய்வோமாக!

# கனவா அன்றேல் நனவா?

அன்றுமாலை 8மணியிருக்கும். கோவில் ஆராதனைகளை முடித்துக்கொண்டு, என் நண்பர்கள்சிலருடன் கடற்கரையில் உட்கார்ந்து இன்றைய எங்கள் அரசியல்நிலைபற்றி உரையாடிக் கொண்டிருந்தோம்.

இளந்தென்றல் எங்கள்மேல் மெல்லெனவீசவே, உடம்பு சில்லெனக் குளிர்ந்தது. நண்பர்கள் எல்லோரும் கதையை முடித்துக்கொண்டு நடையைக்கட்டினர். நானும் ஒட்டிக்கிடந்த மண்ணைத் தட்டிவிட்டு வீடு வரஎழுந்தேன். ஆனால், திடீரென்று யாரோ என் தோள்களைப்பிடித்து அமர்த்துவதுபோல் இருந்தது. திரும்பிப்பார்த்தேன். இருளிலே ஓர் உருவம் நின்றுகொண்டிருந்தது. ஆளை அடையாளம்தெரியாமல் இருளரக்கன் மறைத்துக்கொண்டிருந்தான். என்னருகில் மெள்ளமெள்ள அந்தஉருவம் உட்கார்ந்து கொண்டது. எனக்கோ என்னசெய்வதென்பதேதெரியாமல் வெயர்த்துக்கொட்டியது. என்முதுகில் தட்டியபடியே இருந்த அந்தஉருவத்தைத் திரும்பிப்பார்க்கவும் பயமாக இருந்தது. நான் எப்படி வீடுபோய்ச் சேரப்போகிறேன்! என்பதைநினைக்கும்போது, மனம்சற்றுத் துணிந்துவிட்டது.

எப்படியோ "நீ யார்?" என்று கேட்டுவிட்டேன். "சத்தம்போடாதே! நான் ஒரு கள்ளத்தோணி" என்று கூறியது அந்தஉருவம். நான் சற்றுப்பெருமூச்சுவிட்டேன். "ஆமா! உங்கள் அரசியலில் ஏதோ குழப்பங்கள் எல்லாம் நடக்கின்றதாமே" என்று ஆங்கிலத்தில் வெகுஅழகாகக் கேட்டது.

"அரசியலில் என்ன, இலங்கைப் பிரசைகள்மனங்களே இன்று குழம்பிக்கொண்டுதானே இருக்கிறது" என்று துணிந்து கூறிவிட்டேன். உடனே அந்தஅருவம் என்னைத் தட்டியபடி "நன்றாகப் பேசுறியே! அது என்ன குழப்பங்கள்" என்று வருத்தம்கலந்த குரலில்கேட்டது.

நானும் உணர்ச்சியால் உந்தப்பட்டுச் சொல்லத் தொடங்கிவிட்டேன். "இதுவரையில் எந்த அரசியல் கட்சிகளும் பெறமுடியாத பெரும்பான்மையுடன் இப்போதைய அரசாங்கக்கட்சி ஆட்சிபீடம் ஏறியிருக்கிறது. கம்யூனிசத்திற்கும், மாக்சியத்திற்கும் இடமளிப்பதே அதன் நோக்கமாகவுள்ளது. தனியார் பாடசாலைகளைத் 'தேசியமய' மென்னும் திருட்டுக் கொள்கையால் அநியாயமாய்அபகரித்து அரசாங்கமேஆண்டு நடாத்துவது எவ்வளவு அடாத செயல். இதனாலன்றோ எங்கள்மத்தியில் இக்குழப்பங்கள் நடக்கின்றன."

"பண்டாரநாயக்கா இந்தநேரம் இருந்திருந்தால் இந்நிலை எமக்கு வந்தே இருக்காது. நல்ல திறமைசாலியான அவரை நாங்கள் பிரதமராக வைத்திருக்கும் பாக்கியம் நமக்குக் கிடைக்கவில்லை" என்று நான் கூறியதும் அந்த உருவம் என்னைப்பார்த்து "அப்படிச் சொல்லாதே தம்பி!" என்று கூறிவிட்டுத் தான் சொல்லத் தொடங்கிவிட்டது:

"பண்டாரநாயக்கா பிரதமரானால்என்ன, அவர் மனைவி பிரதமரானால் என்ன, எல்லாமே ஒன்றுதான். நான் சொல்வதை நீ ஸ்ரீமாவிடம் கூறினால் இலங்கையில் இனிமேல் ஒரு குழப்பமுமே வராது" என்றது. நான் திடுக்கிட்டேன். தொடர்ந்து கூறியது:

"ஒரு கமிஷனை நியமித்துப் பாடசாலை விஷயங்களையும், பத்திரிகை விஷயங்களையும் ஆராயும்படியும், வகுப்புவாதத்திற்கு இடமளியாமல் சிறுபான்மை, பெரும்பான்மையினருடன் சமாதானமாகப் பழகும்படியும், மதத்தலைவர்களின் சொற்களைக் கேட்டு நடக்கும்படியும், ஏற்கனவே புண்பட்ட இலங்கைமேல் திரும்பவும் வேலால் எறியவேண்டாம்" என்றும் கூறும்படி என் தோள்களைப் பிடித்து உலுப்பியது.

நான் "உன்பெயர் என்ன?" என்றேன். மௌனமாக இருந்த அந்தக் கள்ளத்தோணி உருவம் "நான் என் பெயரைச் சொன்னால் சனக்கூட்டத்தினால் நீ இப்போதே நசுங்கிச் செத்துவிடுவாய்" என்று சிரித்துக் கொண்டு கூறியது.

"பரவாயில்லை, சொல் பார்க்கலாம்" என்றேன்.

சிரித்துக்கொண்டே "நான்தான் உங்கள் இறந்தபிரதமர் பண்டாரநாயகா" என்று என்காதுகளில் மெல்லக்கூறியது. திடுக்கிட்டேன். ஐயோ அம்மா! என்று கூவிக்கொண்டு புரண்டெழுந்தேன். ஆம், உண்மையில் நான் நல்லகனவுதான் கண்டுவிட்டேன். கூடப்படுத்திருந்த என் பெற்றோர்களும், சகோதரர்களும் திடுக்கிட்டு எழுந்தனர்.

"கனவு கண்டாயா தாசன்?" என்று என் அக்கா கேட்டாள். கண்ட கனவை எல்லோருக்கும் சொன்னேன். விழுந்துவிழுந்து சிரித்தனர். சிரிப்பின் இடையே "நாளைக்கே புறப்படுதாசன் ஸ்ரீமாவிடம்" என்றார் என்தந்தை. நானும் கொல்லெனச் சிரித்துவிட்டேன்.

ஞா. யேசுதாசன்,

### 5-ம் வருட
## மரண ஞாபகம்



*"என்னைச் சீவியத்தில் நேசித்தவர்களே! என்னை மரணத்தில் மறவாதீர்."*

**பிறப்பு: 22-7-88 இறப்பு: 18-2-56**

எனது நேசபத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய **ஸ்ரீமான் அலேசுப்பிள்ளை பிரான்சீஸ்பிள்ளை** அவர்கள் இவ்வுலகை நீத்த ஐந்தாவது வருடம் இம்மாதம் 18-ந் திகதி சனிக்கிழமை பூர்த்தியாவதால், அன்றுதினம் அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக யாழ்ப்பாணம் ஆசனக்கோவிலில் ஓர் துக்கப் பாடற்பூசை நிறைவேறும்.

இதைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளும், சங். சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளும், உறவினர் — சிநேகிதர்களும், ஏனையோரும் அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக விசேஷவிதமாய் வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நேசப்பத்தாவை இழந்து துன்புறும்
ஜேர்துமரி—பிரான்சீஸ்பிள்ளை
அருமைத் தந்தையை இழந்து
துயருறும் பிள்ளைகள் :
சங். சிஸ்ரர் மேரி பிறசன்ரேசன்
( திருக்குடும்ப மடம் )
சங். சிஸ்ரர் குழந்தையேசுவின்
மேரி கலிஸ்ரா
( கார்மேல் மடம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் அன்பு

கடைசியாக ஐரோப்பாவில் நடந்த யுத்தத்தின்போது "நான்ஸ்" (Nantes) என்னும் இடத்தில் ஒரு இளங் குரவரிருந்தார். அன்று இரவு பன்னிரண்டுமணி. மணிச்சத்தம் கேட்டதும் மேல்மாடியில் தூங்கிக்கொண்டிருந்த குரவர் ஒரு நொடிப் பொழுதில் கீழ்வீட்டு வாயிலை அடைந்தார்.

ஓர்பெண், வயது நாற்பது இருக்கும். குருவைக் கண்டதும் அவரை நமஸ்க்கரித்து "சுவாமி! ஓர் அவசர அலுவலின் நிமித்தம் உங்களை அழைக்கவந்தேன்; ஓர் இளம் வாலிபன் இறக்கப்போகின்றான்; தாங்கள் உடனே தானே புறப்பட வேண்டும் சுவாமி" என இரந்தாள். "நான் பொழுதுவிடியு முன்னர்தானே உன்வீட்டுக்கு விரைந்துவருவேன்" 'என்றார் அக்குரவர். ஆனால், அம்மங்கை நம்பிக்கையற்றவளாகக் கைகளைப் பிசைந்தவண்ணம் "சுவாமி! நாளை நம்பிக்கையற்றது, நாளையை நம்பமுடியாது; தாங்கள் தாமதியாது வரவேண்டும் எனக்கெஞ்சினாள். குருவானவர் உடனே தன் சட்டப் பைக்குள் இருந்த ஓர் புத்தகத்தை அவளிடம் கொடுத்து: "பெண்ணே! உன் மேல்விலாசத்தை இதிலே குறித்துவிடு, தற்போதுதானே நான் புறப்படுவேன்" என்றார். அவள் தாமதமின்றிப் பென்சிலை எடுத்து 'று டெஸ்காட்,' இல. 37, 2-ம் மாடி (Rue Descartes, no. 37, 2nd Floor) என விரைவாக வரைந்தாள். பின்னும் குரு: "பெண்ணே பயப்படாதே, இன்னும்இருபது நிமிடங்களுள் நான் உன் வீட்டில் நிற்பேன்" எனக்கூறினார். அப்பெண்மணியின் வதனம் மலர்ந்தது. தன் இருகைகளையும் கூப்பியவண்ணம் "சுவாமி! இவ் அர்த்தராத்திரியில்—நித்திரை உங்களை உறுத்தும் இவ் வேளையில் தாங்கள் தாமதியாது புறப்படப்போகிறீர்கள்; கடவுள் உங்களுக்கு உயரிய சம்பாவனையளிப்பார்" என விடுத்து அவ்விடத்தைவிட்டு விரைந்தாள்.

இருள் அடைப்புக்குள் 'று டெஸ்காட்' (Rue Descartes) என்னும் இடத்தை மிகக் கஷ்டத்துடன் கண்டுபிடித்தார் அக்குரவர். இலக்கம் முப்பத்தேழு பொறிக்கப்பட்டிருந்த அந்த அறை விசாலமானதாக விளங்கிற்று. குரு தெருவில்நின்று நோக்கியபோது அவ்வறை ஒருசிறு வெளிச்சத்தையாவது கொண்டிருக்கவில்லை. அவர் தன் கையிலிருந்த வெளிச்சத்தினுதவியுடன் அக்குறுகிய படிகளைக்கடந்து இரண்டாம் மாடியை அடைந்தார். கதவில் தட்டினார். ஒருவருடைய காலடிச்சத்தம் கேட்டது. அறையிலும் வெளிச்சம் ஏற்பட்டது. கதவைத் திறந்துகொண்டு ஒரு வாலிபன் வெளிவந்தான். அந் நடுநிசியில் தன்முன் ஒரு குருவைக்கண்டு அவன் திடுக்கிட்டான். "மரணத்தருவாயில் இருக்கும் இளைஞனைப்பார்க்க வந்தேன்" என்றார் அக்குரவர். வாலிபன் விறைத்துவிட்டான். சில விஞடிகள் தரித்து "என்ன கூறுகிறீர்கள் சுவாமி, யாரைத்தேடி வந்தீர்கள்" என வியப்புடன் வினவினான்.

குரு: "மரணத்தருவாயிலிருக்கும் வாலிபனைத் தரிசிக்க அழைக்கப்பட்டேன் தம்பி."

வாலிபன்: மரியாதையாக, "சுவாமி! நீங்கள் சரியான வீட்டையா அடைந்தீர்கள்? நீங்கள் தேடிவந்த வீட்டு விலாசம் உங்களிடமுண்டா சுவாமி?"

கு: ஆம்; 'று டெஸ்காட், இல. 37, 2-ம் மாடி' பாரும். என்னை அழைக்கவந்த அப்பெண்மணியே இதைக் குறித்துக் கொடுத்தாள்" எனக் கூறிக்கொண்டு மேல்விலாசத்தை அவனுக்குக் காண்பித்தார்.

வா: "உம்... சரியான விலாசத்தையே அடைந்துள்ளீர்கள், சுவாமி! நான் மாத்திரம் இங்கு இருக்கின்றேன், ஆனால் நல்ல சேமமாகவே இருக்கின்றேன்.

கு: "சரி, அப்படியாயின் நான் சென்று வருகிறேன்" எனக்கூறித் திரும்பினார்.

வா: அவரைத்தடுத்து "சுவாமி! சற்று நில்லுங்கள். உள்ளே வாருங்கள். ஓர் மூடப்பெண்ணின் கதையைக்கேட்டுவந்து இக் கடுங்குளிரில் விறைத்துப் போயிருக்கிறீர்கள். கொஞ்சம் காப்பியருந்துங்கள்" எனக்கூறிக் குருவை உள் அழைத்தான். குரு நாற்காலியில் உட்கார்ந்தவண்ணம் காப்பியைப் பருகினார்.

வா: "சுவாமி! அந்த விலாசத்தை நான் இன்னோர்தடவை பார்க்கலாமா"?

கு: "தாராளமாக" எனக் கூறிக்கொண்டு அதை அவன்கையில் கொடுத்தார்.

வா: விலாசத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். முகத்தில் வியப்புக் குறிகள் தோன்றின. "ஆம்... இந்த எழுத்து எனக்கு நன்றாகத் தெரிந்த ஒருவருடையதுபோலத் தோன்றுகின்றது" எனக் கூறிக்கொண்டு ஆழ்ந்த யோசனைக்குள்ளானான். முகம் இருண்டது. தலை கவிழ்ந்தது. அறையில் அமைதி நிலவியது. சற்று நேரத்தின் பின் "சுவாமி! மூன்று வருடங்களுக்குமுன் நான் எனது அருமைத் தாயை இழந்தேன். தற்போது என் தந்தையாருடன் தனிமையாகச் சீவிக்கின்றேன். அவர் கீழமாடியிலுள்ள தொழிற்சாலையில் கடமையாற்றிவருகிறார்" என்றான். வாலிபன் இவ்வாறு பேசுகையில் அவன் இன்னும் ஏதோ பேச விரும்புவதாக அவன் முகக் குறிகளிலிருந்து விளங்கிக்கொண்டார் குரவர்.

கு: "மெய்தானா தம்பி?"

வா: "ஆம் சுவாமி."

வா: "சுவாமி......"

கு: "தம்பி! நீ ஏதோ ஒரு விஷயம் பற்றிப் பேசவிரும்புவதாக உன் முகம் கூறுகின்றது. உண்மைதானா?"

வா: "ஆம் சுவாமி, ஆனால் .."

கு: "மகனே! என்ன? தயங்காதே என்ன வேண்டும்?"

வா: "சுவாமி! நான்... இல்லை. எனக்குத் தைரியமில்லை சுவாமி" எனக் கூறிக்கொண்டு தலையைக் கீழே தொங்கவிட்டான்.

கு: அவனின் இருகரங்களையும் பற்றியவண்ணம் மௌனமாகச் செபித்துக்கொண்டு அவனை உற்றுநோக்கினார். அவன் பேசவில்லை. சற்று நேரத்தின்பின் கண்களிலிருந்து நீர் சொரிந்தவண்ணம்,

வா: "சுவாமி! நான் என் அருமைத் தாயாரை இழந்தநாட்தொட்டு இற்றைவரை ஒரு குருவையேனும் நாடியதேயில்லை. ஆனால், அன்றுதொட்டு இன்றுவரை நான் கட்டிக்கொண்ட பாவங்களுக்குக் கரையில்லை சுவாமி. நான் ஓர் பெரும் பாவி. ஊதாரிப்பிள்ளைகளில் ஒருவனாகிய எனக்கு இவ்வுலகில் மன்னிப்பேயில்லை; சுவாமி! சுவாமி! கடவுள் என் பாவங்களை மன்னிக்கமாட்டார்" என்று கூறிக் கலங்கினான்.

கு: "மகனே! அவநம்பிக்கைப் படாதே. கடவுளை நம்பு. அவர் உன் பாவங்களை மன்னிப்பார். நீ அவரைத் தேடாதிருந்தும் அவர் உன்னைத் தேடு

## மாதர் பக்கம்

கிறார். கலங்காதே, விசுவாசமுள்ளவனாக அவரில் நம்பிக்கையை முற்றாக வை; மகனே! 'மனந்திரும்பும் எந்தப் பாவிக்கும் மன்னிப்பு உண்டு' என எம் நல்ல தேவனே வாக்குப்பண்ணியிருக்கிறார். உத்தம மனஸ்தாபப்பட்டு நல்ல பாவசங்கீர்த்தனம் செய்வாயானால் அவையெல்லாம் கழுவப்பட்டுவிடும்." (சற்றுநேரத்தின்பின்)

வா: "ஆம் சுவாமி. நான் பாவசங்கீர்த்தனம் செய்யப்போகிறேன். எனக்குதவி செய்யுங்கள்." வாலிபன் விம்மி விம்மி அழுதுகொண்டு பாவசங்கீர்த்தனம் பண்ணினான். குரவர் தகுந்த புத்திமதிகூறிப் பாவமன்னிப்பளித்து வீட்டைவிட்டு வெளியேறினார்.

வா: "சுவாமி! நீங்கள் தேடுவது று டெஸ்காட் அல்ல, று டெஸ்பாட் (Rue Despartes) ஆக இருக்கலாம். அங்கே சென்றால் ஒருவேளை நீங்கள் தேடுபவரைக் கண்டடைவீர்கள்என்று கூறிக் குரவரை வழியனுப்பினான்.

மணி மு. ப. மூன்று அடித்தது. குரவர் 'று டெஸ்பாட்' என்னும் இடத்தை அடைந்தார். யுத்தகாலமாக இருந்ததன் நிமித்தம் அச்சமையம் அபாயக்குறிகள் (air raid sirens) முழங்கின. இல: 37. கொண்ட வீட்டைத் தேடித் தேடித் திரிந்த குரவர் அதைக் கண்டுபிடிக்கவில்லை. காரணம் அவ்விடத்திலுள்ள வீடுகளில் இல. இருபதுதான் கடைசி இலக்கமாக இருந்தது.

அதற்கிடையில் நகரத்தின்வடபகுதி வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டதுமன்றித் தெருக்களையும் அதிரச்செய்தன. உடனே குரு அருகிலிருந்த ஒதுக்கிடத்தில் புகுந்து பதுங்கிக் கொண்டார். அபாய நீக்கக் குறியைக் கேட்டதும் குரு வெளியேவந்து பார்த்தபொழுது பாதிநகரம் நெருப்புக்கிரையாக்கப்பட்டிருக்கிறது எனக் கேள்வியுற்றதும் அண்மையிலிருந்த அபாயநிலையத்தை அண்டிச்சென்றார், காயமடைந்தோர் நூற்றுக்கணக்காகக் கொண்டுவந்து குவிக்கப்பட்டனர்.

குரு ஒவ்வொருவராகத் தரிசித்துப் பாவப்பொறுத்தல் ஆசீர்வாதத்தையும், கடைசித் தேவதிரவிய அனுமானத்தையும் கொடுத்துக் கடைசியாகஓர் இளம் வாலிபனிடம் வந்தார். அவனைக்கண்டதும் குரவர் ஆச்சரியத்தால் பேச்சு அற்றவராய் இரண்டொரு விஞடிகள் தரித்தார். "என்ன நடந்ததுசுவாமி? உமக்குத் தெரிந்த ஒருவர்போல இருக்கின்றதே" என அருகில் நின்றவைத்தியர் ஒருவர் ஆத்திரத்துடன் வினவினார். "ஆம், என்னுடைய விசாரணைப்பங்கைச் சேர்ந்த ஒருவர்" எனப்பதிலளித்தார் அக்குரவர். அவருடைய கண்களை அவரே நம்பமுடியவில்லை. என்ன ஆச்சரியம்! இரு மணித்தியாலங்களுக்குமுன் 'று டெஸ்காட்' என்னும் இடத்தில் சந்தித்துப் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொண்ட அதேவாலிபன் இறந்து கிடக்கக் கண்டார். அவனுடைய சட்டைப் பையைப் பரிசோதித்தபோது அவ்வாலிபனுடைய பெயரும், வயதும், ஓர் குறிப்புப் புத்தகத்தில் பொறிக்கப்பட்டிருந்தன. அத்துடன் ஓர் பெண்ணின் புகைப்படமும் அப்படத்தில் கீழ் 'அம்மா: இறப்பு 8-8-,39, R. I. P.' என்றும் வரையப்பட்டிருந்தது. அப்படத்தைக் கண்டதும் குரு பிரமிப்படைந்தார். என்ன விநோதம்: அந்த இராத்திரியில் குருவின் அறைக்குச் சென்று அவசரமாக அவரை அழைத்த அதே அம்மணியின் படம் அது. ஆம், அவள்தான் அப்பெண்மணி. தன் ஒரே ஒரு செல்வப் புதல்வனைத் தன் கண்ணின் மணிபோலவளர்த்த அம்மங்கைஅவள். அவன் பாவச்சேற்றில் புரளுகிறான் என்பதை அறிந்தாள்; அவனின் அந்திநேரம் வந்துவிட்டதுஎன உணர்ந்தாள்; குருவின் உதவியின்றி மகன் பரகதியடையானேஎன நெகிழ்ந்தாள்; அழைத்தாள் குருவை; இரட்சித்தாள் தன் மகனை.

A. C.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2663**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம்
காங்கேசன்துறைறோட், 612-ம்நம்பர்
சின்னையா சுப்பிரமணியம்
— வழக்காளி.

எதிராக

காரைதீவுவடக்கு சடையளி
1. அப்புக்குட்டி சுந்தரம்பிள்ளையும்,
2. பெண் சிவபாக்கியம்மாளும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2663-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியைப் 1961-ம்ஆல் சித்திரைமீ 8-ந்உ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 7,140-உம், 23-1-59 தொடக்கம், 27-8-59வரைக்கும் ரூபா 6,000-க்குக்கு 8வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும்கோட்டுச்செலவு 301ரூபா 28சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுகே[illegible]ற்பற்று வலந்தலையிறை "சடையாளி" பர. நில. இலா. 11-உம் (பதினொன்று), வடலிகளும், பனைகளும், செய்பயிர் வான்பயிர்களும், வீடுகளும். எல்லை: கிழக்கும், வடக்கும் — ஒழுங்கை. மேற்கு — சுந்தரேஸ்வரசுவாமி கோவிலின் ஆதனம். தெற்கு — ஆறுமுகம் கைம்பெண் இலட்சு[illegible] ஆதனம். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவுக்கந்தோரில் C 2[illegible]6/195-ஆம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அ. ஜெகநாதன்,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 6, 2-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

## தாண்டவன்வெளிச் செய்தி

### வருடாந்த மகோற்சவம்

தாண்டவன்வெளி, பரிசுத்தகாணிக்கைமாதாதேவாலய வருடாந்தமகோற்சவத்திற்கான ஆயத்த நோவனைகள் கடந்த 1-1-61 இல் தேவதாயின் கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகி 5-2-61 இல் முடிபெய்தியது. திருநாளுக்கு முன்தினமான 4-2-61 இல் மாலை 3-30 மணிக்குத் தேவதாயின் திருச்சுரூப ஊர்வலமும், திரிகோணமலை மேற்றிராசன நல்லாயர் மகாவந். இக்னேசஸ் கிளெனி, யே. ச. ஆண்டவரவர்களால் ஆடம்பர மாலையாராதனை, திருச்சுரூப ஆசீர்வாதமென்பனவும் நடைபெற்றன. வண. எல். ஆர். அந்தோனி சுவாமியவர்களால் "காணிக்கைமாதாவின் மகிமை" என்பதுபற்றி வரலாற்றுரை நிகழ்த்தப்பட்டது.

கட்டளைக்குரு வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமியவர்களால் திருநாட்தின ஆராதனைகள் நடாத்தப்பட்டுக் கொடியிறக்கு வைபவத்தோடு முடிவெய்தியது.

இவ்வருடத்தில் வெளி ஆடம்பாங்களெதுவுமின்றி அடக்கவொடுக்கம், பக்தியருட்சி, பரித்தியாகம், செபவேண்டுதல்களுடன் அமைதியாகத் திருநாள் முடிபெய்தியது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலாய்லாமாவின் மாளிகைகள்

## பூட்டி முத்திரையிடப்பட்டிருக்கின்றன

தீபேத்தின் தலைநகரமாகிய லாசாவில் தலாய்லாமாவுக்குச் சொந்தமான இரு மாளிகைகளைச் சீன அரசாங்கம் பூட்டி முத்திரையிட்டிருக்கிறதென 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகை கூறுகின்றது. தீபேத்தியர் தமது பழைய பாரம்பரியங்களுடன் கொண்டிருந்த கடைசித் தொடர்பையும் அழித்துவிடும் நோக்கம் கொண்டிருக்கிறது. சீன அரசாங்கத்தின் இச்செயல் 1959-இல் தீபேத்தில் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டதும், தீபேத்தியரின் வைதீகத் தலைவரான தலாய்லாமா இந்தியாவில் சரண்புகுந்தது நாம் அறிந்ததே. தலாய்லாமாவின் பரம்பரை ஆதீனமான பொட்டலமாளிகை பூட்டி முத்திரையிடப்பட்டிருக்கிறது. "மணிப்பூங்கா" எனப் பெயர் பெற்ற கோபுலிங்கமாளிகை விசேஷ தினங்களில் மக்கள் பார்வையிடத் திறக்கப்பெறுகின்றதாம்.

### மேற்றிராணியாருக்குப் பொலிசாரின் பாராட்டு

கோறியாவில் குவாஞ்சு மேற்றிராணியாராயிருக்கும் அமெரிக்கரான கென்றி ஆண்டகை அந்நாட்டின் தேசிய பொலிஸ்படையினரைச் சனநாயக அடிப்படையில் அமைப்பதற்கு அதிஉத்தம உதவி புரிந்தமைக்காகக் கௌரவிக்கப்பட்டிருக்கிறார்.

யுத்தச்சேதம் நிறைந்த தமது மாகாணத்தில் பொலிசாருக்கு உதவி செய்வது மக்களின் கடமையென இடித்துரைத்தும், காட்டுப்படையினர் கொன்ற பொலிசாரின் விதவைகளுக்கும், அநாதைகளுக்கும் பேருதவி புரிந்தும் சேவையாற்றினர்.

# மெக்சிக்கோவில் கல்விச்சட்டம் பற்றிக் கண்டனம்

மெக்சிக்கோவின் மேற்றிராணிமார், சமயக்கல்விக்குத் தடை விதிக்கும் அரசியற் சட்டத்தைத் திருத்தியமைக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாக மேற்றிராணிமாரின் வட்டாரங்களில் செய்தியறிந்த ஒருவர் கூறியிருக்கிறார். மேற்படி சட்டம் ஐக்கியநாடுகளின் அடிப்படை உரிமைகளின் பிரகடனத்துக்கு முரணானது என்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

மேற்றிராணிமார்களின் சங்கத்தின் கல்விப் பகுதித் தலைவரும், குவர்னவாக்கா மேற்றிராணியாருமாகிய சேர்ஜியோ மென்டெஸ் ஆர்சியோ ஆண்டகையவர்கள், "எவ்வித கல்வியைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்பதை நிச்சயப்படுத்தப் பெற்றோருக்கு உரிமை உண்டென்பதை ஐ. நாடுகளின் மனித அடிப்படை உரிமைச்சாசனம் எடுத்துக் கூறுகின்றது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

1917-ம் ஆண்டின் மெக்சிக்கோவின் அரசியல் சட்டத்தில் மூன்றும்சரத்தில், சமயஸ்தாபனங்கள் பாடசாலைகளுடன் "எவ்வித தொடர்பும்" வைத்துக்கொள்வதைத் தடைசெய்கின்றது. ஐ. நாடுகளின் அடிப்படை உரிமைச் சாசனத்தின் 26-வது சரத்து "தங்கள் பிள்ளைகளுக்கு எவ்விதமான கல்வி ஊட்டப்படவேண்டுமென்பதைத் தெரிவு செய்யப் பெற்றோருக்குப் பூரண — முதன்மையான உரிமையுண்டு" என்று கூறுகின்றது.

# பாராளுமன்றத்தில் ஒரு கத். குரு

செகுண்டோ லொறென்ரே, யே. ச. சுவாமியார் அலாஸ்கா பாராளுமன்ற சபை அங்கத்தவராய்த் தமது இஷ்டத்துக்குமாருகவே தெரியப்பெற்றிருக்கிறார். அவர் தமது நியமனப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கவோ, தேர்தற் பிரசாரம் செய்யவோ, வேறு எவ்வித முயற்சி எடுக்கவோ இல்லையெனினும் அமெரிக்க சட்டங்களுக்கேற்ப வாக்காளர்கள் அவர்பெயரைச் சமர்ப்பித்தார்கள்.

போட்டியிட்ட மற்றையோர் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையைவிட அதிகப்படியான வாக்குகளைப் பெற்றார். அவருடைய சிரேஷ்டரான கிளீசன் மேற்றிராணியார், சுவாமியார் பாராளுமன்றச்சபை அங்கத்தவராய்ச் சேவைசெய்வதற்கு வழிகள் எல்லாம் திறந்திருக்கின்றன எனக் கூறினர். ஸ்பானிய தேசத்தவரான லொறென்ரே சுவாமியார் 25 ஆண்டுகளாக அலாஸ்காவில் திருப்பணி புரிந்து வந்திருக்கிறார்.

### ஆப்கானிஸ்தானில் முதற் கத்தோலிக்க தேவாலயம்

ஆப்கானிஸ்தானிலுள்ள முஸ்லீம்களிடையே கத்தோலிக்கசமயப் போதகத்தையும், பிறதேசப் பிள்ளைகளுக்குங்கூடப் பள்ளிகள் நடத்துவதையும் தடைசெய்துவந்த அரசாங்கம் தலைநகரத்தில் (காபூல்) ஒரு கத்தோலிக்க தேவாலயத்தைக் கட்ட உத்தரவளித்திருக்கிறது இத்தாலிய ஸ்தானிகருடைய காணியில் அமைந்திருக்கும் இவ்வாலயத்தோடு குருமனையும் இருக்கிறது. இவ்வளவு காலமும் காபூலில் இருந்த 220 பிறநாட்டுக்கத்தோலிக்கர் இத்தாலிய ஸ்தானிகருடைய காரியாலய அறையொன்றில் பூசை கண்டுவந்தனர். ஆப்கானிஸ்தான் நூற்றுக்கு நூறுவீதம் ஒரு முஸ்லிம் நாடு.

# வியாபாரியின்வீடு ஆசனக் கோவிலானது

ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன் இஸ்பிரீத்துசாந்துசபைக் குருக்களில் ஒருவர் சன்சிபாரில் அராபிய வியாபாரி ஒருவனிடமிருந்து வாடகைக்கு அமர்த்திய வீடொன்றில் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். கிழக்காபிரிக்காவின் இப்பகுதியில் மிஷனரிப் பணி இப்படித் திரும்பவும் ஆரம்பமாயிற்று.

போர்த்துக்கேய குருமார் மத்திய காலத்தில் இங்கு திருஊழியம் புரிந்த போதிலும் அது தொடர்பாக நடைபெறவில்லை.

1860-இல் முன்கூறியபடி ஆரம்பமான முதற பூசையைத் தொடர்ந்து இஸ்பிரீத்துசாந்துசபைக் குருமார் இன்றும் அங்கு திருப்பணியாற்றிவருகின்றனர். இங்கிருந்தே உள்நாடுகளுக்கும் போதிக்கச் சென்றிருக்கின்றனர். முன்னர் குறிப்பிட்ட அராபிய வியாபாரியின்வீடு தற்பொழுது சன்சிபார் மேற்றிராசன ஆலயத்தின் ஒரு பகுதியாயிருக்கின்றது. மொம்பாசாவுக்கும், சன்சிபாருக்கும் மேற்றிராணியாரான பட்லர் ஆண்டகைஅவர்கள் சென்ற நத்தார் விழாவின்போது திருஊழிய ஆரம்ப நூற்றாண்டின் ஞாபகவிழாவை நடாத்திவைத்தார்.

### சிகறெற் புகையிலைச் செய்கை

மயிலிட்டிப்பற்றுச் சிகறெற்புகையிலைச்செய்கைச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் ஒன்று சென்ற 9-ம் திகதியன்று கூடியபோது, அதிலே சங்க தலைவரான பிரக்கிராசியார் வி. இராசநாயகம், ஜே. பி. அவர்கள் பேசியவிடத்து: "மலையாளப் புகையிலைச்செய்கையை நம்பி வடஇலங்கைத்தமிழர் இனிமேல்வாழமுடியாது; அதில்ஏற்[illegible]டுகின்ற பலவிதசிக்கல்களும் இப்போது வெளிப்படையாகின்றன; புகையிலைவியாபாரிகளுமே அவற்றை உணருகின்றார்கள்; ஆகவே, அரசாங்க உதவியுடன் நாம் சிறறெற்புகையிலை செய்வது ஒருசிறந்த மாற்றுவழியாகும்; இத்துறையிலே பலரும் விடா முயற்சியோடு உ[illegible]டும்" எனக் கூறலா[illegible]

# சிறுபான்மை மதங்...

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

யென்றே சொல்லலாம். அப்படியாயின், மக்களுடைய தேவைக்கு ஏற்றவாறு புதிய மத ஆலயங்களைப் பழைய மதஆலயங்களில் இருந்து ஒரு மைல் வட்டாரத்துக்கப்பால் அமைப்பது எங்ஙனம்? சிறுபான்மை மதத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் மதத்தினர் போதியளவு இல்லாத இடங்களிலே தங்கள் புதியமத ஆலயங்களை அமைக்கவேண்டும். ஆனால், இதற்கு முதலாவது நிபந்தனை இடம்கொடுக்காது. ஆகவே, புதிய மதஆலயங்கள் நிறுவும் விஷயத்தில் சிறுபான்மை மதத்தினர் இருதலைக் கொள்ளி எறும்புக்குச் சமமாகின்றனர் எனலாம்.

புதிய மசோதா தோற்றத்தளவில் எல்லா மதத்தினரையும் பாரபட்சமின்றி நடத்துவது போல்தோன்றினாலும், உண்மையில் பெரும்பான்மை மதத்தினருக்கு வசதிகளை அளித்து, அவற்றைச் சிறுபான்மை மதத்தினருக்கு மறுக்கின்றது. பெரும்பான்மை மதத்தினராகிய பௌத்தர்கள் அதிகமாகவாழும் இடங்களில் குறிக்கப்பட்ட அரைமைல் வட்டாரத்துக்குள் 250பேருக்கதிகமானோர் குடியேறியிருப்பதைப் பலவிடங்களில் காணலாம். ஆகவே, இரண்டாவது நிபந்தனை நிறைவேறுமாயின் அவர்கள் விரும்பிய இடங்களில் தங்கள் மதஆலயங்களை நிறுவ வசதியுண்டு. தங்கள் மதத்தைப் பகிரங்கமாய் அனுசரிக்கவும், பரப்பவும் பெரும்பான்மை மதத்தினருக்கு மட்டுமன்று, எந்தச் சிறுபான்மை மதத்தவருக்கும் அடிப்படை உரிமையுண்டு. இந்த அடிப்படையுரிமையை இந்திய அரசியல்சட்டம் உறுதியாக அங்கீகரித்துள்ளது. ஆனால், எமது அரசாங்கம் மேற்படி புதியமசோதா மூலம் அதை இலங்கை மக்களுக்கு மறுக்கின்றது.

புதிய மசோதா மதஆலயங்களை நிறுவும் உரிமையைச் சிறுபான்மை மக்களுக்கு மறுப்பதுமல்லாமல், அவர்களுடைய பழைய ஆலயங்களையும் ஆபத்துக்குள்ளாக்குகிறது. கிராம அல்லது பட்டணச் சீர்திருத்தம் காரணமாக, அல்லது கலாசார, மத சம்பந்தமான, சரித்திரசம்பந்தமான காரணங்களுக்காக, பழைய மத ஆலயங்கள் ஒரு இடத்தில் இருந்து மற்றோர் இடத்துக்கு மாற்றப்படலாமென்று மசோதா கூறுகின்றது. இதுவிஷயத்தில் கலாசார அமைச்சருக்குச் சர்வாதிகாரம் அளிக்கப்படுகின்றது.

வேறு எந்தச் சனநாயக நாட்டிலும் காணமுடியாத விசித்திரமான இந்த மசோதாவை அரசாங்கம் கொண்டு வந்ததற்குக் காரணமும் கூறப்படுகிறது. மதங்களிடையே காணப்படும் ஒற்றுமையீனத்தை நீக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாம். அருமையாக நிகழ்ந்த சிறு மதப்பிணக்குகளை ஆதாரமாகக்கொண்டு அரசாங்கம் இந்த மசோதாவைக் கொண்டு வந்துள்ளது. பல நூற்றாண்டுகளாக இலங்கையில் உள்ள எல்லாமதங்களுக்கிடையேயும் சகிப்புத்தன்மையும் உடனிருந்து வாழுமபண்பும் நிலவிவந்துள்ளது. ஆகவே, இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்குப் போதியகாரணமேயில்லை. சிறுபான்மை மதங்கள் பரவுவதை மறைமுகமாகத் தடுத்தலே அரசாங்கத்தின் உண்மையான நோக்கம் போல் தோன்றுகிறது. இது மதசுதந்திரத்துக்கு முற்றும் மாறான நடவடிக்கை என்பது வெள்ளிடைமலை. ஆகவே, மதசுதந்திரத்தை விரும்புவோரும் சிறப்பாகச் சிறுபான்மை மதத்தினரும் அரசாங்கத்தின் சர்வாதிகாரப்போக்கைக் கண்டித்துத் தங்கள் மதவுரிமைகளைப் பாதுகாக்க ஆவனசெய்தல் அவசியமென்க.

"சந்ததி விருத்தியைத் தேவையான அளவுக்குக் கட்டுப்படுத்திக் கொள்ளச் சுய கட்டுப்பாடு ஒன்றுதான் நிச்சயமான மார்க்கம். கர்ப்பத்தடைக் கருவிகளைப் பயன்படுத்தினால் அது மனித குணத்தின் தற்கொலையாகும்."

— காந்தியடிகள்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna on Thursday February 16-1961

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org